# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

தை - 2023



# காற்றுவெளி
**கலை இலக்கிய இதழ்**

தை - 2023

படைப்புக்கள் அனுப்ப :
Neythal34@gmail.com
Mahendran54@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : muhammed sajid
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


## வணக்கம்.

காற்றுவெளியின் தை (2023) மாத இதழுடன் சந்திக்கிறோம்.

இன்றுவரை 20 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக உங்களை சந்தித்து வருகிறோம். சிற்றிதழுக்கான வலிகள்,தடங்கல்கள்,தாமதங்கள்,அரசியல் போன்ற பலவற்றின் தாக்கங்களைக் கடந்தும் வெளிவரவேண்டிய ஆர்வம்,ஓர்மம் காற்றுவெளிக்கும் பொருந்தும்.

புதிய ஆண்டு புதிய சங்கல்பங்கள் பலவற்றுடனும் காற்றுவெளி இம்மாதம் தடம் பதிக்கிறது.

மாசி மாத இதழ் சிற்றிதழ் சிறப்பிதழ்காக வெளிவரும்.உங்களின் படைப்புக்கள் ஏற்புடையதாக இருப்பின் நிச்சயம் பிரசுரமாகும்.

ஒவ்வொரு மாதமும் 18 ஆம் திகதியே அடுத்த மாதத்திற்குரிய இதழுக்கான படைப்புக்களை வடிவமைப்பிற்காக அனுப்பிவிடுகிறோம். எனினும் தாமதமாக அனுப்பிவிட்டு கேள்விகள் கேட்கும் படைப்பாளர்கள் புரிந்துகொள்ளுங்கள். மின்னிதழ் தானே தங்களின் முழுப்படைப்புக்களையோ,முழு நாவலையோ பிரசுரிக்கும்படி கோருகின்றனர்.சாத்தியப்படாது எனபதையும் உணர்க.

லதா எழுத்துருவில் படைப்புக்கள் கிடைப்பதில்லை.இதனால் எழுத்துருமாற்றத் தடங்கல்கள் ஏற்படுகிறது.

தை மாதம் (2023) நம்பிகைக் கீற்றுகளைத் தரவேண்டும். உலக யுத்த அச்சுறுத்தல்கள், பிராந்திய வல்லரசுகளின் ஊடுருவல் அனைத்தும் நீங்கி மக்கள் அமைதியாக வாழ வழிசெய்யவேண்டும்.அனைத்து இனவிடுதலைக்காக உலகமகாசங்கங்கள் உதவுதல் வேண்டும்.

சிறிலங்காவின் இனப்பிரச்சினை நீங்கி அரசியல்வாதிகளின் தலையீடின்றி தமிழ்மக்களின் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வினை எட்டக்கூடியவாறு அனைத்துலகம் உதவவேண்டும்.தமிழ்மக்களின் அடிப்படைப்பிரச்சினை பற்றி யாவரும் அறிவர்.அவை தீராமல் யாவற்றையும் பூசிமெழுகிவிட முடியாது. வெளிநாடுகளின் நடுவர் மன்றங்களின் அனுபவமும் தமிழர்க்கு உண்டு.

நம்பிக்கையை விதைப்போம்.கிழக்கு வெளிக்கட்டும்.

நட்புடன்,

**சோபா**

# படைப்புகளின் பங்குதாரர்கள்

**கட்டுரைகள் :**

*1.* கவிஜி

*2.* பிரேமா இரவிச்சந்திரன் சென்னை

*3.* திருஞானசம்பந்தன் லலிதகோபன்

**கவிதைகள் :**

*4.* வாசுகி வாசு

*5.* தங்கேஸ்

*6.* ஈழபாரதி

*7.* பொலிகை ஜெயா. (சுவிஸ்)

*8.* கனகசபாபதி செல்வநேசன்

*9.* நேசன் மகதி

*10.* கோபால்தாசன்

*11.* அ. செல்வராஜ்

*12.* கவிஞர் மாலதி இராமலிங்கம்

*13.* கவிஞர் கவியரசன்

*14.* கண்ணன் (கண்ணன் விஸ்வகாந்தி)

*15.* கலா புவன் - லண்டன்

*16.* பாரியன்பன் நாகராஜன்

*17.* ஹரணி

*18.* மா. சித்திவினாயகம்

*19.* யாழ்.எஸ்.ராகவன்

*20.* சாய் கபாலீசுவரன்

*21.* சரஸ்வதிராசேந்திரன்

*22.* ந க துறைவன்

*23.* ஐ.தர்மசிங்

*24.* வித்யாசாகர்

*25.* சா. கா. பாரதி ராஜா,

*26.* ச. இராஜ்குமார்

*27.* இளையவன் சிவா

*28.* குமரி உத்ரா

*29.* ரோஷான் ஏ.ஜிப்ரி

*30.* செ.புனிதஜோதி

*31.* மு.ஆறுமுகவிக்னேஷ்

*32.* இரா. மதிராஜ்

**சிறுகதைகள் :**

*33.* சுந்தரிமணியன், புதூர்

*34.* தி.வள்ளி

*35.* நௌஷாத் கான் .லி

*36.* அ.முத்துவிஜயன்

*37.* மூபின் சாதிகா

● **வாசுகி வாசு**

## பச்ச்ச்ச்ச்சை....!!!!!

பசும்
புல்வெளியே....
மென்
பனிகாற்றில்
உறைந்து கிடப்பது...
என் உள்ளம்மட்டுமல்ல
உன்...
மரகதவண்ணத்தின்
பட்டொளியும்,

கனிந்தினிக்கும்
இசைமொழியென
மண்ணில்...
மெல்லிசையாக படரந்துள்ள
உன் பசுமையில்
என்...
மனமும்.. சாரலாகியது

புல்வெளியே...!!
உன்
மீது உருண்டோடும்
பனித்துளிகள்
உன்னில் தவழ்ந்து
சிலிர்த்து சிலாகித்துக்கொள்கின்றது

உன்
பசுமையை
பஞ்சு மெத்தையாக்கிய
பனி மொட்டுகள்
தாமரை இலை நீர் துளியாக
தத்தளித்து
நழவியும் வழுக்கியும் உருண்டாடுது.


நீ...
தூரத்தே...
தாழம்பூ மடல்களாகி
அருகினிலே...
மனோரஞ்சிதம் இதழ்களாகி
பெரும் பரப்பின் புல்வெளியாக
வாசம் அலையாடுது,

அந்த...
பைங்கிளி...!!!
கூட்டமும்
உன்
அழகினைக் கண்டு
அதிசயிக்கின்றது,

அதோ
அந்தவிருட்சங்கள்..!!!!

அதன்
விளிம்பில்...
மருதாணியின்
இளம் வண்ணமாக
கதிரோனின்
மென் கதிர்வீச்சில்
தீரா மென் பிரகாசமாக
திகட்டி நின்கின்றது

மண்...!!!
தொட்ட அழகோ
இதயம்...!!
தொட்ட அழகோ
யாதொன்றும் புரியாமல்
ஏதொன்றும் தோன்றாமல்
சதிராடுகின்றது மனம்.



● ஈழபாரதி

## அகதியான புத்தன்

துன்பத்தை
புன்னகைத்துக்கடந்துவிடுகிறான்
புத்தன்
அவன் சிரிப்பில்
அகதியான எம்மால்
புன்னகையை
முகத்தில் அப்பிக்கொள்ளமுடிவதில்லை
எப்போதும்
போதிமரத்தடியில்
துளிர்விடும் ஞானம்
மாற்றாய்
எல்லா மரத்தின்
அடியிலும் வேர்பரப்புகிறது
அரசமரம்
நேற்று
வேப்பமரத்தடியிலிருந்த
அம்மன்சிலை
புத்தன்சிலையாக
கிளைவிடுகிறது
வேறறுத்த மரத்தின்
விதையிலிருந்து.

● தங்கேஸ்

## முன் யாமத்தில்

முன்யாமப் பொழுதில் கசியும் பனியும்
விசும்பும் மேகங்களும்
இந்த வீணையை மீட்டி
கொஞ்சம் அதிரவைக்கின்றன

மரவட்டையாக சுருண்டு கிடக்கும் காலம்
பதறி எழுந்து அறையை விட்டு
ஊர்ந்து செல்கிறது

சின்னஞ் சிறு மூங்கில் குச்சியால்
அதன் முதுகை கீறிக்கீறி
காயப்படுத்தியது போதும்

நம் பொருட்டு யாதும் எவரும்
காயப்படாமலிருக்க
இந்த இரவை எடுத்து நீ விழுங்கி விடு

நான் காத்திருக்கும்
சுவர்பல்லியின் முன்பு
சின்னஞ்சிறு பூச்சியாக நகர்கிறேன்



● பொலிகை ஜெயா. (சுவிஸ்)

## கடலின் கோபம்

நேற்று கடற்கரையில் தனிமையில் நின்றேன்
என்னருகே வராதே'தள்ளி நில் என்றது-அலைகள்ஞ்
சிறிது கடல் நோக்கி நகர்ந்தேன்,
ஆர்ப்பரித்து குறுக்கு வெட்டாக
தன் கோபத்தைக் காட்டியது - கடல்...
அதன் கண்களோ கோபத்தில் நீலமாய்,
என் பாதமோ சிறிது புதைந்தன மண் குதிரில்...
மீண்டும் எனைநோக்கி ஆர்ப்பரித்தது கடல்
நான் சிறிது பின்னோக்கி நகர்ந்தேன்...
யாரைத்தேடி என்னிடம் வந்தாயென கேட்டது?
நான்' விடையை சட்டைப்பைக்குள் வைத்து
பேச மறுத்தேன்- கடலுடன்...
என்கோபத்தில்' வானை நோக்கி தூதனுப்பியது...
வானம் இருட்டியது, கடலோ கருநீலமாய்
உருமாறிப் பயம் காட்டியது...
என் நெஞ்சிலோர் நெருடல்...
அண்ணார்ந்து பார்க்கிறேன்
கடற் காற்றுடன் தலையை முட்டி+மோதி
காற்றைக்கிழித்து கூடு நோக்கி
பறந்தன பட்சிக்கள்- தூக்கத்திற்கு...
இப்பிரபஞ்சத்துடன் சுழன்று
கடலை வெறுத்து வீடுசேர்ந்தேன்...

● நேசன் மகதி

## சுத்தமான வெயில்!

நீர் சேர்த்து
துடைக்கப்பட்ட
கண்ணாடியின்
பளபளப்பினை
ஒத்துக்கிடக்கிறது
மழை கழுவி வைத்த
வெயில்!

● கனகசபாபதி செல்வநேசன், அல்வாய்.

# எனது மரமும் எனது முற்றமும்



*சின்னச் சின்னக் குழிகள்
காயப்பட்ட முற்றம்
குழிகளின் அருகில்
சின்னச் சின்னக் கோபுரங்கள்
பறவையின் சிறகுகளாய்
அபிசேக ஆராதனை முடிந்து
கலைந்து கிடக்கிறது.*

*வேலிக்கு வலிக்காமல்
அதன் காயங்களுக்கு மருந்திடுகிறது
செண்பகம்
அருகில் அந்த வேப்பமரம்
கிளைகள் செதுக்கி உயரம் நோக்கி
கதைகள் சொல்கிறது.*

*இனிவரும் தலைமுறைகளும்
அதன் நிழலில் இளைப்பாறும்
என்ற நம்பிக்கையிருக்கிறது.*

*இடப்பெயர்வின் இடர்கள் துரத்திய
வருடங்கள் கடந்து
மீண்டும் வருகிறேன்.*

*உறவுகள் உடைத்து உணர்வுகள் தொலைத்து
சிறிதாய் இருக்கிறது முற்றம்
கனவுகளைச் காசாக்கி இருப்பை இழந்தது
அந்த மரம்.*

*குற்றவாளிகளைத் தண்டித்த மின்கம்பங்கள்
சமுதாயம் வெளிச்சமடைந்தது
சூது வரைந்த தூரிகையின் இருள் கிழித்து
காரிகையின் பயம் அகன்றது.*

*கல்விச் சாலைகளில் கந்தகம் வீழ்ந்தது
பெருந் துயரத்தின் நீட்சிக்கு -,அது
ஆரம்பமாகியது.*

*தாயகத்தின் ரணங்கள் அடைமாளமேதுமின்றி
ஆக்கிரமிக்கப்பட்டது
அதுவே பேரினவாதத்தின்
நிலை தளர்த்தி பெரும் சுமையாகிறது.*

*தாயின் மடியில் உறங்கும் ஆசை
உலகுக்கு கசப்பாயிருந்தது
விடுதலை வேண்டி விழுந்த விதை
உரமானதா...!? மண் கிழிக்குமா....?
மண் கிழித்தால் நல்லது.!*

## ● கோபால்தாசன்

# வேலைக்காரி

பார்வதியம்மாக்கிட்ட
செத்த குடிக்க
தண்ணி வாங்கி குடிச்சிக்கிட்டு
முந்தானை முந்தியால
மொகத்த தொடச்சிக்கிட்டு
அடுத்த வூட்டை நோக்கி
விரைந்தாள் பொன்னம்மா

வூட்டிற்குள் இறைந்து கிடந்த
துணிமணிகள் விளையாட்டு
சாமான்களை எடுத்தெடுத்து
ஒழுங்குபடுத்தி பெருக்கியவாறு

அடுக்களைக்குள் நுழைந்து
ஒதுக்கி போட்டிருந்த பாத்திரம்
விளக்குகளை துலக்கியெடுத்து
லேசாய் நிமிர்ந்து
கடிகாரத்தை பார்க்கையில்
பசங்களை டியூசனுக்கு அனுப்பும்
நேரம் நெருங்க

எதிரே
ஆவி பறக்கும் காபியை
நீட்டிக் கொண்டிருந்த
ஓனரம்மாவிடமிருந்து
ஒரே மடக்கில் வாங்கி குடித்து
நடந்தபடியே 'சரிம்மா வரேம்மா' என

வூட்ட நோக்கி நடையைக் கட்ட;
இப்படி
அதிகாலை சேவல் குரலுக்கு முன்னே
எழுந்து வீடு வீடென
வீடு வீடாய்
விறுவிறுவென ஓடும்
வாழ்க்கையின் பந்தயத்தின் முடிவில்
ஜெயிப்பது
அவளா
கனவுகளா?



## ● அ. செல்வராஜ். உடுமலைப்பேட்டை.

# ஹைக்கூ கவிதைகள்

அனாதி காட்டில்,
நவீன உள்கட்டமைப்பு வசதிகள்,
கறையான் புற்று.!!!!!!!

பேருந்து மேற்கூரையில்,
இலவசமாக பயணிக்கின்றது,
புளியமர நிழல்.!!!!!

சிறுமரத்தை பொறுமையோடு,
வளர்த்தெடுக்கிறது,
வடியும் குடிநீர்க்குழாய்.!!!!

பறவைகள்,
இரையைத் தேடுகின்றன,
கோபுர உச்சியில்.!!!!!

மரத்தின் நிழலில்,
இளைப்பாறுகின்றன,
ஆற்றுக்குள் மீன்கள்.!!!!



# நீறு பூத்த நெருப்பு

● சுந்தரிமணியன், புதூர்

மதிவதனி கல்லூரிக்குச் செல்ல நேரமானதால் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள். சமையலை முடித்துவிட்டுக் குளித்துக் கிளம்பவேண்டும். காலேஜ் பஸ் வந்துவிடும். சமையலை முடித்தவுடன் கல்லூரிக்குக் கட்டுவதற்கு ஏற்ற ஒரு காட்டன் புடவையைத் தேர்வு செய்து வைத்துவிட்டுக் குளிக்கச் சென்றாள். வீட்டை விட்டுக் கிளம்பும்போது மணி சரியாக ஒன்பது முப்பதைத் தாண்டியது. பஸ் ஸ்டாப்பிற்குப் போக பத்துநிமிடம் நடக்கவேண்டும். வேக வேகமாக நடந்த மதிவதனிக்கு வயது முப்பதைத் தாண்டிவிட்டது. ஆனால் பார்க்க இருபத்தைந்து மதிப்பிடலாம். பெரிய கண்களும், கூர்மையான மூக்கும் சிவந்த நிறமும் அவளை எடுப்பாகக் காட்டுவதோடு ரோட்டில் கடந்து செல்பவர்களைத் திரும்பிப் பார்க்க வைக்கும். அவள் காட்டன் புடவைகளைக் கட்டுவதில் நேர்த்தியும் கண்ணியமும் இருக்கும்.

காலேஸ் பஸ் வந்து ஏறி அமர்ந்தவுடன் அவளது ஞாபகங்கள் பழைய நினைவுகளில் மூழ்கிப் போயின. கல்லூரியில் முதல் ஆண்டு வகுப்புகள் தொடங்கிய காலத்தில் புதிதாக வந்திருந்த மாணவர்களைப் பார்க்க மதிவதனிக்கும் ஆர்வமிருந்தது. வந்த மாணவர்களில் பிபிஏ வகுப்பில் தங்களை அறிமுகம் செய்து பேசச்சொன்னாள். அவர்களில் மாணவன் மணிமாறனும் ஒருவன். டீச்சர் என ஆரம்பித்தவுடனே மாணவர்களின் கேலி தொடங்கியது.

"இனிமேல் டீச்சர் என்று என்னைக் கூப்பிடக்கூடாது. அம்மா அல்லது மேடம் என்று கூப்பிடு" என்று சொன்னாள். மணிமாறனின் கிராமத்துப் பேச்சும் கள்ளமில்லாத குணமும் அவளைக் கொள்ளை கொண்டன. அவள் வகுப்பெடுக்கும் திறனைப் பார்த்து

"அம்மா சீனிப்பட்டாசு வெடிக்கிற மாதிரி வெடிக்கிறீங்க" என்பான். ஒரு நாள் வகுப்பில் கிளாஸ் எடுத்துக் கொண்டு இருக்கும்போது மணிமாறன் தூங்கிக் கொண்டு இருந்ததைப் பார்த்தவுடன் சட்டென்று கோபம் வந்து புத்தகத்தை அவன் தலையில் போட்டாள். திடுக்கிட்டு விழித்தவன்,

"சாரிம்மா இரவு வேலைக்குப் போனதால் என்னையும் அறியாமல் அசந்துவிட்டேன்" என்றான்.

"ஏன் இரவு வேலைக்கெல்லாம் போகிறாய். எப்படிப் படிக்கமுடியும் உன்னால்..." என்றேன்.

"வேறு வழியில்லை. நான்தான் வேலைக்குப் போய் படிக்க வேண்டியிருக்கிறது." என்றான். என்னையும் அறியாமல் அவன்மேல் கரிசனம் உண்டாயிற்று. அடிக்கடி கல்லூரிக்கு மணிமாறன் லீவு போட்டதை அடுத்து பெஞ்சில் அவன் பக்கத்திலிருக்கும் மாணவனிடம் விசாரித்தேன். "அவங்கப்பா இறந்து போனதால் அவன்தான் வேலைக்குப் போய் குடும்பத்தையும் பார்த்துக்கொண்டு, படிக்கிறான் மேம்" என்றான். இந்தச் சின்ன வயதிலேயே இவ்வளவு சுமைகள் சுமப்பதைக் கண்டு எனது கண்கள் குளமாயின.

மணிமாறன் படித்துக் கொண்டே வேலைக்கும் போய் வந்தான். சுமாராகப் படித்துத் தேர்விலும் வெற்றிபெற்றான். முதல் செமஸ்டர் முடிந்து இரண்டாவது செமஸ்டரின் முடிவில் ஒரு நாள் அந்த சம்பவம் நடந்தது.

அன்று அதிகாலையில் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்த மதிவதனிக்கு கெட்ட கனவின் எதிரொலியால் மனது ஒரு மாதிரியாக இருந்தது. வெகு சீக்கிரமாகவே கிளம்பி கல்லூரி வந்தவளுக்கு ஸ்டாப் ரூமிற்குள் இருந்த நிசப்தம் மனதை நெருடியது. உள்ளே நுழைந்தவுடன் மேத்ஸ் மேடம்

"மேம் உங்களுக்கு விசயம் தெரியுமா?" என்றார்கள்.

"என்னாச்சு?" என்ற மதியைப் பார்த்து "நேற்று சென்னையிலிருந்து மதுரை வந்த ரயிலில் மணிமாறன் இரவில் படிக்கட்டில் அமர்ந்து வந்திருக்கிறான். தூங்கி இடையிலேயே விழுந்து இறந்துவிட்டான். மேம்" கேட்டவுடன் என் கண்களில் என்னையும் அறியாமல் கண்ணீர் துளிர்த்தது.


"ஐயோ நல்ல பையனாச்சே.வேலையும் பார்த்துக்கிட்டுப் படிச்சவனாச்சே. வீட்ல எவ்வளவு கஷ்டப்படறாங்களோ."

என்று புலம்பிய மதிக்கு அன்று வேலையே ஓடவில்லை. மேத்ஸ் மேடம் வேறு

"மேடம் அவன் அடிபட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாக் கிடந்திருக்கிறான். எவ்வளவு நேரம் இப்படித் துடித்தானோ தெரியலையே. அவன் கூடப் போன நண்பர்களுக்கும் தெரியலை போல. காலைலதான் ஆளக் காணோமேன்னு தேடியிருக்காங்க"

என்றதைக் கேட்டவுடன் இன்னும் துக்கம் தொண்டையைக் கட்டியது.

ஒரு மாதங்கள் அவனது நினைவுகள் ஞாபகத்தில் வந்து வந்து போயின. அவன் இறந்து ஓராண்டுகள் கடந்த நிலையில் அவனைப் போலவே டீச்சர் என விளிக்கும் மாணவனைப் பார்க்கும்போதும் வகுப்பில் தூங்கிவிழும் மாணவனைப் பார்க்கும்போதும் எனக்குக் கோபமே வருவதில்லை. அவனைப் போலவே கற்கும் வயதில் சுமைகளுடன் வரும் மாணவர்களைப் பார்க்கும் போது மனதில் எழும் பின்னோக்கிய நினைவுகளில் நீறு பூத்த நெருப்புப் போல மணிமாறனின் முகம் வந்து வந்து சிரிக்கிறது.



● கண்ணன்
(கண்ணன் விஸ்வகாந்தி)

## செண்பகமரம்

வான் தொடும் உயரம்
கர்வத்துடன் மற்றவை நோக்கி
தலைகுனிந்து சிரிக்கும்
வளரும் கவனத்தில்
பூவை மறந்தது
கடைசித் தருணமறிந்து
கேட்டது என்னிடம்:
'பூ வைக்கலன்னுதான வெட்டற?'
'ஏன் இப்படியெல்லாம் பேசுற?'
திருப்பிக் கேட்டபடி
விழி துடைத்து வீட்டில்
நுழைந்தேன்
எப்படிச் சொல்வேன் அதுவும்
ஒரு காரணம் என்று?

● கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.

## சுழல் சக்கரம்

காலத்தோட கையிலதா சுத்தற சக்கரம்!
காலங்காலமா சுத்துதே காலச் சக்கரம்!
காலத்துல நம்பிக்கை இருக்கற மனுசருக்கு
காலத்தோட அருமதா கனகமாத் தோணுமுங்க!

ஒலகம் உருவானதும் காலத்தோட கோலம்!
ஒலகம் சுத்தறதுக்கும் பின்புலமே காலம்!
ஒலகத்தல நடக்கற எதுக்கும் காலம்!
ஒலகத்தோட நடப்போ ஓயாதக் காலம்!

மாடத்திலே குந்தியிருந்தே காலத்த ஓட்டுவாங்க!
கூடமில்லா குடிசையிலே ஒண்டியும் இருப்பாங்க!
எந்தவூரு மகராசன் எங்கிருந்தா என்ன?
முந்தற சக்கரந்தா நிக்குமா என்ன?

நேத்திருந்த நெலமை இன்னிக்கி மாறும்!
நேரங்காலம் கூடியே நெல்லதா ஆவும்!
இன்னிக்கு வந்த இன்னலும் போவும்!
இப்பிடியே சக்கரம் தன்னால உருளும்!

பொறந்தோம் இருந்தோம்னு முடிஞ்சா வாழ்க்கையா?
பொறப்புக்கு பிரயோசனமா செஞ்சா கொறஞ்சிடுமா?
மனுசனுக்கு மனுசன் காட்டற அன்பிருந்தா
மண்ணுக்கே பெரும கூட்டுற பண்பிருக்கும்!

எண்ணந்தா வாழ்க்கையின்னு ஏத்துப் போனா
மண்ணுக்கு நெல்லது மாறாம நடக்கும்!
எல்லாமே மாறியே போனதுக்குப் பின்னாலும்
எல்லாத்துக்கும் சாட்சியா காலந்தா நிக்கும்!




# ஆகாயத் திணை கவிதை நூல் ஒரு பார்வை

● கவிஜி

பொதுவாகவே பறவைகள் மீது இருக்கும் இனம் புரியாத கவர்ச்சி இந்த நூலை படித்து முடிக்கையில் இன்னும் கூடுகிறது.

ஆகாயத்தில் கூடு கட்டும் பெரும் வெளிச்சமென உள்ளார்ந்த ஒரு சிறகடிப்பு. வெளியில் நிகழ்வதெல்லாம் உள்ளே நிழலாக படிவது போன்ற சமிக்ஞை. பறவைகளின்றி வானம் ஏது. அவைகளின் கால்களில் தொற்றிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கவிதையும் விதை என்றே உணர்கிறேன். வீழ வீழ எழும் விருச்சமென வரும் எண்ணத்தில்... வண்ணம் பூசி செல்லும் ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு செய்தி.

சொற்களின் வழியே சோலை செய்ய தெரிந்திருக்கிறது. சொக்கிய வானம் பறவைகளாகி வந்திருக்கிறது.

கவிதைகளைப் போல ஆழ்ந்து கிடக்க வேறென்ன இருக்கிறது. பறவைகளைப் போல வாழ்ந்து கிடக்க வேர் எங்கே இருக்கிறது. வாக்கியத்தில் சிறகாட்டும் தாரிக் ஷிஃபீக்-ம் ஒரு பறவை என்றே நம்புகிறேன். வானம் பார்க்காத இதயத்தில் பறவைகள் வாழ்வதில்லை. இவர்ஞான வண்ணம் நீல வானம் என்கிறேன். ஆகையால் தான் ஆகாயத் திணையில் அத்தனையும் திண்ணை விரித்து காத்திருக்கிறது. ஆசுவாசம் இளைப்பாற ஒவ்வொரு கவிதைக்குள்ளும்... உட்கார்ந்து பேசும் பேரன்பு. ஒய்யாரமாய் வீசும் மாலைத்தென்றல்.

போகும் வழியெல்லாம் விதைகள் தூவி செல்லும் பறவைகள்... வாழும் போதே சிறு தெய்வங்கள். வலசைக்கு வந்தாலும் சரி. வாடைக்கு வந்தாலும் சரி. ஆசீர்வதிக்கும் அதன் வருகை என்கிறது இந்த நூலின் வரிக்கு வரி. நூல் முழுக்க மன நிம்மதி. வன நிம்மதியும். வானம் பார்த்து கிட. வாழ்க்கை புரியும். பறவை உற்று நோக்கு. வாழுதல் புரியும். சொல்லும் செய்திகள் கவிதைகளாகின. சொல்லாத செய்திகள் விதைகளாகின. பார்த்து பார்த்து விதைத்திருக்கிறார். படித்து படித்து சிலாகிப்போம்.

இவ்வாழ்வில் மானுடம் கண்டடைந்திருப்பது பேரன்பு. கூடவே விடுதலை. அதன் குறியீடு பறவைகள். அவைகளின் வழியே ஆசிரியர் செய்திருக்கும் திணை... ஆகாயத்தை அருகில் கொண்டு வந்திருக்கிறது. அதன் வழியே ஆனந்தம் தலை முட்டும் தூரத்தில் தான் என்கிறது. சிரி. சிறகடி... என்பது தான் இவர் வரைந்த சித்திரம். கைதட்டி ஆரவாரிப்பது சின்னஞ்சிறு பறவைகள். அவை சொல்லும் கானத்தின் வழியே இவர் காட்டும் வானம் நமக்கு ஞானம்.

ஒவ்வொரு கவிதையிலும் சிறுகு பொருத்தி இருக்கிறார். ஒவ்வொரு அசைவிலும் நாம் பறக்கிறோம். நூல் முழுக்க இறகுகள் என்றால் தகும். அதன் வழியே பிரபஞ்ச உறவுகள் என்றால் விரியட்டும் அகம். இவர் காணும் பறவைக்கெல்லாம் வனதேவதையின் சாயல். இவரைக் காணும் பறவைக்கெல்லாம் அழகு கவிதையின் சாயல். காடும் கவிதையும் வானமும் வதனமும் என்று எல்லாமும் பறவைகளின் வழியே இவர் பேனாவில் விதையிட்டிருக்கின்றன.

படிக்க படிக்க பேரானந்தம். சிறு பிள்ளையின் சிற்றூஞ்சல். முதிர் மனதின் முக்தி நிலை. இளம் பிராயத்தின் இசை நடனம். படித்து முடிக்க பறவை வசம்.

"அத்திப்பழம் என நினைத்து

புல்லாங்குழலை

விழுங்கியிருக்கக்கூடும்

ஆதிக் குயில்"

ஐயோவென இருந்தது. அருள் வந்த ஆனந்தம். ஆகச் சிறந்த ஆரம்பம்.

"வானவில்லைக் கொடுத்து

எந்த நிறம் இதில்

அம்மா எனக் கேட்டால்

எதனைக் காட்டுவது"

என்று ஒரு கவிதையை முடித்திருக்கிறார். முடிந்து வைத்த பேரன்பு முந்திக் கொண்டு தன்னை ஈன்றிருக்கிறது.

அவர் கண்ட மென்மை அவர் கவிதையெங்கும் இருக்கிறது. அவர் கொண்ட மேன்மை படிக்க படிக்க உணர்கிறோம். கவிதை ஒரு மனிதனை எத்தனை அழகாக்கி விடுகிறது என்று ஷிவீக்ஷீ ஐ காண்கையில் எல்லாம் நான் உணர்ந்திருக்கிறேன். அன்பை தவிர வாழ்வு வேறென்ன கற்றுத் தர போகிறது. அதன் குறியீடாக தான் அவர் பறவையைக் காட்டுகிறார். வானத்தை போதிக்கிறார். அமைதியின் தூரங்கள் நேரமாய் அமைந்து விட்டால் தினமும் போதி தான் நம் வாசல் என உணர்கையில்... உள்ளூர நன்றிகள் தான் ஆகாயத் திணைக்கு.

"பறவைகளின் மீது

எறிய நினைத்திருந்த கற்களை

உள்ளங்கைக்குள்

பத்திரப்படுத்துதல்"

என்பது என்ன தெரியுமா... கடைசி நேர கருணை என்கிறார். கடைசி கவிதையிலும் முதல் விதை செய்ய தெரிந்த ஆசிரியர் கருணையின் வடிவம் என்றால் தகும் தானே.

பறவைகளின் விதங்களை.... வண்ணங்களை..... வாழ்க்கையை பக்கத்துக்கு பக்கம் வரைந்து பார்த்த திருப்தி இருக்கிறது. வரைய வரையவே பறந்து விட்ட பறவைகள் தான் கவிதைகளாகவும் ஆகி இருக்கின்றன.

"எளிதில் பறித்து விடலாம்

இந்தப் பூவை

கனவில் வந்தழும்

மரத்துக்கு

எப்படி ஆறுதல் சொல்வது"

என்று கேட்கிறார். பூ பறித்தலில் இருக்கும் இயல்பு விரல் நடுங்க யோசிக்கிறது. அதன் விதியை முடிவு செய்ய நீ யார் என்றும் கேட்கிறது. பறவை வானம் பூ செடி... மரம் மண் என்று எல்லாவற்றிலும் இருக்கும் உயிரை தனதாக்கி உணரும் நூலின் ஆசிரியர் கண்ணாடி அணிந்த கவிதை பூ என்கிறேன். புன்முறுவல் பூக்கட்டும் அவர் வானம். அதில் புதிதாய் பூக்கட்டும் புது பறவை.

"இருள் சூழ்வதற்கு

சற்று முன்னர் மறையும் அது

தனது கூட்டுக்குத்

திரும்பியிருக்கும் தானே" என்று வருத்தப்படும் இவருக்கு பறவையின் ஞான தடங்கள் புரிந்திருக்கிறது. பின்னிரவு ஒற்றை பறவையின் துயரம் தூரங்களால் ஆனது. அது கூடடைந்த பறவைகளுக்கும் தூக்கமில்லாத இரவு தான். உணர்ந்திருக்கிறார். ஆகவே எழுத்தில் உதிர்த்திருக்கிறார்.

வாழ்வின் எல்லா தருணங்களையும் பறவைகளோடு இணைத்து விடும் கண்ணிகள் இவர் சிந்தை வெளியில் அழகாக பதிந்திருக்கிறது. ஆதலால் தான் பகல் கூட பறவை ஆகி விடுகிறது. வாழ்வின் நம்பிக்கைகள் எல்லாம் சிறகுகள் பொருத்தி இருப்பதால்... வீழ்ந்திட காரணமே இங்கு இல்லை. வாழ்ந்திட தான் வானம் வானமாய் காரணம் என்று இவர் வரி வழியே புரிந்து கொள்ளலாம். துயர்கள் கூட அன்றிலாகும் தருணத்தில் இன்ப துன்ப எல்லா உணர்வுக்கும் பறவையே சாட்சி.

"காற்றோடு கலந்து போயிருக்கும்

மருதநில நாகனாரும்

ஓரம் போகியாரும்

இந்நேரம்

என்ன செய்து கொண்டிருப்பார்கள்"

என்று முடிக்கும் கவிதையின்... ஆரம்பம்

"காற்றின் திசைக்கேற்ப

அசைந்தாடுகிறது செந்நெல்" என்றிருக்கிறது.

நான்காம் பத்தி வரியை போல நாம் அலகில் வைக்கோலை கவ்வியபடி அங்குமிங்கும் பறக்கிறோம் ஊர் குருவியாக. உள்ளூர் குருவியாக இருக்கும் குதூகலம்... சனி ஞாயிறு விடுமுறைக்கு ஏங்கும் பள்ளி சிறுவனாக இருந்தால் புரிந்து விடும்.

"நாற்பது நாளில்

பறவைகளின் பாசை

புத்தகம் கிடைத்தால்

உங்களில் யாரேனும்


வாங்கி அனுப்புங்களேன்" என்று கேட்டிருக்கும் ஆசிரியருக்கு அவர் புத்தகத்தையே அனுப்புவது தான் சரி.

"ஆகாயத் திணை" - பறவைகளின் பாசை.

இப்படி.. இன்னும்... நூல் முழுக்க அசையும் சிறகுகள் அவரைத் தான் காட்டுகின்றன. அவைகளுக்கு நன்றிகள் சொல்லும் அதே நேரம் கூடல் தாரிக் ஷிவீக்ஷீ க்கு அன்புகள் சொல்வோம்.

ஏனெனில்...

இந்த நூல் கூட ஒரு பறவை தான். பற்றிக் கொள்வோருக்கு வானம் வசப்படும்.



# இருந்து விட்டுப் போகட்டும் இன்பமார்கழி...!

● **கவிஞர் கவியரசன் கடம்பத்தூர்.**

கொக்கரித்து திரிந்த வெக்கையை விரட்டி விட்ட ஆனந்தத்தில் றெக்கையை மெல்ல விரிக்கத் தொடங்கிவிட்டது மார்கழியின் பனிப் பறவை...

இப்போதெல்லாம் சூடான குவளை தேநீ ருக்குள் குதித்து நிமிர்ந்த பிறகே குதுகளிக்கிறது கதகதப்பை காதலியாக்கிக் கொண்ட மனம்...

ஓடையில் ஆடிப்பாடிய கனவுகள் கூட கம்பளி போர்வைக்குள் கண் சிமிட்டி கைகோர்க்கிறது சூடேற்றியபடி...

மூக்கோடு மூக்கு வைத்து முணுமுணுக்கும் குருவிகளாய் முயற்சித்து பெருமூச்சு விடுகையில் ஏக்கத்தை தீர்த்து வைப்பதாய் எழுந்த உறுதிமொழிக்கு பின்னால் பனிப் பந்தல் என்றாலும் பரவசம் தான் ஆண்டு முழுவதும் ஆண்டுவிட்டுப் போகட்டும் என்று வேண்டிக் கொள்வேன் மார்கழியை...!!




# வைதேகி கல்யாண வைபோகமே..

● தி.வள்ளி, திருநெல்வேலி.

காசி விஸ்வநாதர் ஆலய மணி டாண்..டாண் என அடித்து, பொழுது விடிந்ததை ஊருக்கு அறிவித்துக் கொண்டிருந்தது.ஆதவன் தன் செந்நிறக் கதிர்களை விண்ணில் பரப்பி வானத்தைப் பொன்னிறமாய் அடித்திருந்தான். தாமிரபரணியில் தண்ணீர் இருகரை தொட்டு ஓடிக்கொண்டிருந்தது. காதலனைத் தழுவும் காதலி போல தாமிரபரணியை தழுவிய மென்காற்று சில்லென மெல்லத் தவழ்ந்து வந்தது.

ஊரே நிதானமாய் எழுந்து வேலையைப் பார்க்க.. சுந்தரம் வீடு மட்டும் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது.சுந்தரத்தின் ஒரே மகள் வைதேகியின் கல்யாண நாள் நெருங்கிக் கொண்டிருந்ததே பரபரப்புக்குக் காரணம்.

வாசலில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த சதாசிவம் மாமா எதிரே ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்த பொன்னுசாமியைப் பார்த்தார்.அவன் வாயை கிளற...

"ஏண்டே! கோடி வீட்டு சுந்தரம் மகளுக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கு தெரியும்ல"

" அங்கதான் மாமா போறேன்... கல்யாணத்துக்கு இன்னும் 20 நாளுதான் இருக்கு.அதனால அண்ணாச்சி வர சொல்லிவிட்டாக." ஓட்டமும், நடையுமாக போகிற போக்கிலேயே பதில் சொல்லிக் கொண்டு ஓடிய பொன்னுச்சாமி மூச்சிரைக்க அண்ணாச்சி வீட்டு வாசலில் வந்து நின்றான்.

"ஏல பொன்னு... உன்ன நேத்திக்கு வரச்சொன்னா நீ சாவகாசமா வர்ற... சின்னம்மாவுக்கு கல்யாணம் வச்சிருக்கு... இன்னும் 20 நாள்ல கல்யாணம்.பத்திரிக்கை எல்லாம் அடிச்சு வந்தாச்சு. குலதெய்வம் கோவிலுக்கு போயி சாமி கும்பிட்டுட்டு முதல் பத்திரிக்கை வைச்சிட்டு வந்தாச்சு. இனி பத்திரிக்கை விலாசம் எழுதி உள்ளூர் பூரா கொடுக்கணும் வெளியூருக்கு அனுப்பணும்..நீ போயி நம்ம நடுவீட்டு சதாசிவம் மாமா.. தெக்கு தெரு சிதம்பர அண்ணாச்சி... மெத்தவீட்டு கனகராசு இவங்களயெல்லாம் உடனே வரச் சொல்லு பத்திரிக்கை விலாசம் எழுதணும்னு விபரத்தை சொல்லு.ஒரு பதினோரு மணிக்கு எல்லாத்தையும் நம்ம வீட்டுக்கு வந்துரசச் சொல்லு அவங்களுக்கு மத்தியான சாப்பாடு நம்ம வீட்டுலதான்னு சொல்லிடு..."

"ஆகட்டும் அண்ணாச்சி அவுக எல்லாத்தையும் கையோட கூட்டிட்டு வரேன்" என்று கிளம்பினான் பொன்னுச்சாமி.

"ஏலே... நீயும் கல்யாணம் முடிகிற வரைக்கும் இங்கிட்டு பேசாம கெட... வேலை நெறய கெடக்கு.. ஒத்தையில கிடந்து அல்லாட முடியாது"

"சரி அண்ணாச்சி"என்றான் பொன்னு.

காலை 10 மணி அளவில் எல்லோரும் கூட.. பத்திரிக்கையை வீட்டு பூஜை அறையில் வைத்து கும்பிட்ட, பின் விலாசம் எழுத ஆரம்பித்தனர்.

"கனகு! நீ முதல்ல வெளியூர் விலாசங்களை எழுது! உள்ளூருக்கு முதநா கொடுத்தா கூட போதும். வெளியூர் தான் தபால் போய்ச் சேர்ந்து,அவங்க கிளம்பி வரணும், அதனால அத முதல்ல எழுது" என்றார் பெரியவர் சதாசிவம்.

"டவுன், பேட்டை, ஜங்ஷன், பாளையங்கோட்டை எல்லாம் மூர்த்தி நீ எழுது"

"அம்பை, கல்லிடைக்குறிச்சி, சேர்மாதேவி, முக்கூடல், அரியநாயகிபுரம், முறப்பநாடு இதெல்லாம் நான் எழுதுறேன்"என்றார் முத்தையா. விலாசம் பூரா தனித்தனியா இந்த நோட்டில இருக்கு

"ஏண்டே! இது புதுசு விலாசம் தானே..."

"ஆமாம் அண்ணாச்சி! போன மாசம் நம்ப முக்குவீட்டு ராசு மகன் கல்யாணத்துக்கு தயார் பண்ண விலாச பட்டியல் தான்."

இப்படியாக பரபரப்பாக கல்யாண காகிதங்களில் விலாசங்கள் எழுதப்பட 11 மணிக்கு சுடச்சுட டீயும் வறுத்த முந்திரிப்பருப்பு சமையலறையிலிருந்து வந்து சேர்ந்தது.

மூத்தவர் சதாசிவம்.."ஏலே சுந்தரம்! தவசு பிள்ளைக்கு சொல்லியாச்சா?"

" ஆச்சு மாமா நம்ம அருணாசலம்பிள்ளை கிட்டதான் சொல்லியிருக்கு.. காகிதம் எழுதி முடிச்ச பிறகு சாயங்காலமா அவர் வரும்போது நீங்க எல்லாருமே கொஞ்சம் இருந்தீங்கன்னா தேவலை.. ஒவ்வொரு வேளைக்கும் என்னென்ன செய்யணும்னு மெனு போட்டு கொடுத்திடலாம். மாப்பிள்ளை அழைப்பு முத நாள் காலைல...மத்தியானம் மாப்பிள்ளை வீட்டுக்கு விருந்து கொடுக்கணும்... சாயங்காலம் வாணவேடிக்கைக்கு சொல்லியிருக்கேன். மறுநா கால முகூர்த்தம் ஒன்பது-பத்தரை அதனால கால சாப்பாடு.. மத்தியானம் சொதி சாப்பாடு போடணும்"

"என்னென்ன செய்யணும் எத்தனை பேருக்கு செய்யணும்னு கணக்கு சொன்னாதான் தவசுபிள்ளைக்கு பலசரக்கு சாமான்..காய்கறிகள்...இல எல்லாம் வாங்க தோதுவா இருக்கும். ராசு... தவசுப்பிள்ளை பொறுப்ப

*நீயே எடுத்துக்கோ"*

*"நாளைக்கு நல்ல நாளா இருக்கு 101 ரூபா அச்சாரமா கொடுத்துடு...மஞ்சளை வாங்கி திரிச்சிட்டு மத்த வேலைகளை ஆரம்பிக்க சொல்லு. அடுப்பெல்லாம் முன்னாடியே போட்டுட சொல்லணும்...விறகு அந்த நேரம் வாங்கினா ஈரமா இருக்கும். அதனால முன்கூட்டியே வாங்கி உணர்த்தி அடுக்கி கட்டி வைக்கணும் "என்றார் சதாசிவம்*

*" மாமா அடுப்பு போடுற வேலையெல்லாம் நான் பார்த்துகிறேன்" என்றான் பொன்னுச்சாமி.*

*மதியம் பந்தி பாய் விரிச்சு,தல வாழ எல போட்டு சுடச்சுட பாயாசத்தோடு பரிமாறிய உணவை எல்லோரும் ஒரு பிடி பிடித்தனர்*

*அதற்குள் பொன்னுச்சாமி உள்ளிருந்து எல்லோருக்கும் பாயும் தலகாணியும் கொண்டு வந்து விரித்து தர... ஒரு மணிநேரம் நீட்டி நிமிர்ந்துட்டு திரும்ப எழுதுவோம் என்று எல்லோரும் சற்று படுத்தனர்.*

*உள்ளேகாமாட்சி வேலை பார்த்துக் கொண்டிருக்க...அங்கு வந்த லஷ்மி அத்தை.*

*"ஏண்டி காமு... ஆம்பளைங்க அவங்க வேலையை பார்க்குறாங்க... நாம நம்ம வேலையை பாக்க வேண்டாமா... வெண்ணெய் பத்து கிலோ வாங்கி வை நாளைக்கு நான் வந்து உருக்கி வச்சிடுறேன். வரும் போது முருங்கைக்கீரை கொண்டு வர்றேன். போட்டு உருக்குனா நெய் மணமாயிருக்கும்.பொன்னுவ பரணில இருந்து பெரிய பில்டரையும், இட்லி கொப்பரையும் கீழே இறக்கி வைக்க சொல்லு... எண்ணெய் செட்டியாருக்கு சொல்லிவிடு... 15 லிட்டர் நல்லெண்ணெய் 15 லிட்டர் கடலெண்ணெய் முன்னபின்ன செலவுக்கு சரியாயிருக்கும்." எல்லாவற்றிற்கும் தலையாட்டினாள் காமாட்சி.*

*சற்று நேரம் ஒய்வெடுத்து பிறகு திரும்பவும் கல்யாண பத்திரிக்கைக்கு விலாசம் எழுத ஆரம்பித்தனர் மாலை 4 மணிக்கு சுடச்சுட டீயும், வெங்காய பஜ்ஜியும் வர, சாப்பிட்டுவிட்டு பணியை தொடர்ந்தனர்*

*"அக்கம் பக்கம் உள்ளவங்களுக்கு இரண்டு நாள் முன்ன பத்திரிக்கை கொடுத்துக்கலாம்... தள்ளி உள்ள இடங்களுக்கு அழைப்புகாரரை வரவழைச்சு பத்திரிகைகளை கொடுத்து விடு" என்றார் சதாசிவம்*

*அழைப்புக்காரனை பொன்னுசாமி கூட்டிவர..அழைப்பிதழ்களை ஒப்படைத்து "ஒவ்வொரு வீட்டிலேயும் காகிதத்தை கொடுத்துட்டு காலை சாப்பாடு... மத்தியான சாப்பாடு.. பெண் வீட்டு அழைப்புன்னு விவரம் சொல்லி அழைச்சிட்டு வா..."என்று வீடுகளுக்கான பட்டியலையும்யும் கையில் கொடுத்தனர்.*

*"அழைப்புகாரனோட யார்ல போக போறீங்க.."*

*"காமுவும், நானும் போகட்டா?" என்று சுந்தரம் கேட்க...*

*"பொண்ணோட அம்மா,அப்பா கல்யாணத்தை வச்சிட்டு அலையப்படாது. இன்னும் ரெண்டு வாரம் தான் கிடக்கு. நீ வீட்ல இருந்து வேலைய பாரு"*

*"உன் தம்பி பாலாவையும் அவன் பொண்டாட்டியையும் போக சொல்லு.. அவங்க போனா போதும். எல்லாம் நம்ம சொந்த பந்தம் தானே வந்துடுவாங்க"*

*மாலை தவசு பிள்ளை வந்தவர், ஒவ்வொரு வேளைக்கும் ஒவ்வொரு விதமான உணவு... சமைக்க வேண்டிய அளவு என பட்டியலிட்டு கையில் கொடுத்தார். " நாளை மஞ்சளை வாங்கி திரிச்சிட்டு மத்த சாமான்கள் வாங்கிடறேன். ஆக்குப்பறை பின்னால இருக்கிற செட்டில போட்டுக்கலாம்" என்று சொல்லிவிட்டு...*

*தவசுப்பிள்ளை பின்னால போய் செட்டை பார்த்துவிட்டு வந்தவர் " அடுப்பு போடணும். கல்யாணத்துக்குக்கு தேவையான பாத்திரங்கள், கரண்டி எல்லாத்துக்கும் நான் சொல்லி வெச்சிட்டேன். எங்க ஆட்கள் தங்கறதுக்கு மட்டும் ஒரு இடம் பாத்து குடுத்திடுங்க.காய்கறி, பலசரக்கு சாமான் எல்லாத்துக்கும் நான் பொறுப்பு. நான் பார்த்து வாங்கிட்டு வந்துடுறேன். அடுப்பு மட்டும் முன்னாடியே ஒரு நல்ல நாள் பாத்து தயார் பண்ணி வச்சிடுங்க" என்றவர் உற்சாகமாக 101 ரூபாய் பெற்றுக்கொண்டு கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்னதாகவே வந்து விடுவதாக சொல்லிவிட்டு கிளம்பினார்.அப்படியே அவரிடம் கல்யாண சாப்பாடு தவிர, மறு வீடு பலகாரம், மாப்பிள்ளை பந்தி பலகாரங்கள், என அனைத்து பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது.*

*பெண்கள் தங்கள் பங்குக்கு விளக்கு,பாத்திரம் எல்லாம் விளக்கி வைக்க... வாசல்ல கோலம் போட, வெண்ணெய் ஊருக்க, காப்பி போட, என ஆளுக்கு ஒரு பொறுப்பை எடுத்துக்கொண்டு செய்தனர். ஆட்டுரலில் இரண்டிரண்டு பேராக உட்கார்ந்து மாறி மாறி மாவரைத்து ஒரு பெரிய குத்துப்போணியில் மாவை கரைத்து*

வைத்தனர்.காப்பி போட இரண்டு பேர் பொறுப்பு எடுத்துக் கொண்டனர். யாரையும் ரெண்டு நாள் சமைக்க விடாமல் சுந்தரம் இரண்டு நாட்கள் தெருவுக்கே சமையல் பண்ணி போட்டு அமர்க்களப் படுத்தினார்.

கல்யாணம் விசாரிக்க தினமும் பத்து பேராவது வர, எல்லோருக்கும் காப்பி,டிபன்,சாப்பாடு என அமர்க்களப்பட்டது கல்யாணவீடு....

முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பு... நையாண்டி மேளம்... வானவேடிக்கை... என அமர்க்களப்பட்டது. பெண்கள் எல்லோரும் கூடி வைதேகிக்கு நலுங்கு வைத்தனர்...அவள் குளித்தபின் தலையில் பூ வைத்து முடித்து...புது பட்டுடுத்தி கொலுமேளம் வாசிக்க செய்தனர்.இரவு விருந்து அமர்க்களப்பட்டது. மாப்பிள்ளைக்கு இரட்டை இலை போட்டு, வெள்ளித் தம்ளர், வெள்ளி பாத்திரத்தில் விருந்து பரிமாறினர்.

வீட்டு வாசலில் வாழை மரத்தோடு மலை சாமான்களை கட்டி அலங்காரம் பண்ணியிருந்தார் சுந்தரம். மறுநாள் முகூர்த்தத்திற்கு தனியாக மேடை போட்டு பூ அலங்காரம் பண்ணியிருந்தார்.எல்லோரும் அவரவர்க்கு கொடுத்த பொறுப்பை சரியாக செய்ய, மொத்தத்தில் ஜெ...ஜெ..வென உறவுகள் கூட... அமர்க்களமாக வைதேகி கல்யாணம் நடந்தேறியது.

"மறுவீடு அழைக்க மாப்பிள்ளை வீட்டார் வருவாங்க! மறுவீடு பலகாரம் எல்லாம் ரெடி பண்ணியாச்சா?"

"என்னது! உளறகிட்டிருக்கீங்க" என்று சுந்தரத்தை எழுப்பினாள் காமாட்சி.

" வைதேகி கல்யாணம் முடிஞ்சுருச்சு! மறுவீடு கூப்பிட மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வருவாங்க!" சுந்தரம் புலம்ப...

"நீங்க இன்னும் எந்த காலத்துல இருக்கீங்க!எந்திரிங்க... வைதேகி கல்யாண நாள் நெருங்கிட்டிருக்கு.இன்னும் மூணு மாசம் தான் இருக்கு. அதுக்குள்ள பார்க்க எக்கச்சக்க வேலையிருக்கு.முதல்ல மேரேஜ் பிளானர் யாராவது புடிக்கணும்.எல்லா வேலையையும் ரெண்டு பேரும் தனியா செய்ய முடியாது.. இந்த காலத்துல உதவி செய்ய சொந்தபந்தங்கள் தயாரா இல்ல... எல்லாம் கல்யாணத்தன்னைக்கு தான் வந்து நிப்பாங்க. நாமதான் ஏற்பாடு முழுக்க செய்ய வேண்டும்" என்று புலம்பியவாறு அவரை எழுப்ப....

சுந்தரமும் கண் விழித்தார்." ஐய்யோ.. இவ்வளவு நேரம் கனவு கண்டதெல்லாம் என்னோட கல்யாண காலத்து கனவா... வைதேகி கல்யாணத்துக்கு நானும் காமுவும் தான் எல்லா ஏற்பாட்டையும் கவனிக்கணுமா?" என்று மலைந்தவாரே எழுந்து மேரேஜ் பிளானரை பார்க்க கிளம்பினார்.

## ● மு.ஆறுமுகவிக்னேஷ்

## மருதோன்றி

மருதோன்றி மைலாஞ்சி
அழவணம் மருதாணி

பசியத்தைச் சிகப்பாக்கும்
மருதாணி வேதியியலில்

உன் விரல்கள் மட்டும் எப்போதும்
அதிக மதிப்பெண்களுடன்
தேர்ச்சி பெற்று விடுகின்றன
பூக்கள் மேல்
அபிலாசை நிறைந்த உலகத்தில்
இலைகளில்
மருதாணிக்கு மட்டும் தான்
மவுசு
அதனால் மனமுடைந்த
மருதாணி பூக்கள்
நெஞ்சில் கனல் சுமக்கின்றன
அவை சுமந்த கனலை
நீ உள்ளங்கைகளில்
பிரதிபலிக்கிறாய்
அவ்வளவே.

## ● செ.புனிதஜோதி

உன்காலடிச்சத்தத்தை
உற்றுநோக்க
தெருக்கோடியில் நிற்கிறது
என்செவி.
உலைகொதிக்கும்
பதற்றத்தை
உள்வாங்கிய
மனநிலை.
ஒட்டப்பந்தய
குதிரைப்போல்
துடித்துக்கொண்டிருக்கிறது
என் இதயம்
நீ வர தாமதமாகும்
ஒவ்வொரு நொடியும்
தூக்குமேடையில் நிற்கும்
கைதியைப்போல
துடித்துக்கொண்டிருக்கிறேன்

● **கலா புவன் - லண்டன்**

## சமூகமயமாதல்

*சமூகத்தின் அங்கமாக வாழ மனிதன் மனிதனாக வாழ வேண்டும்*
*மனிதப் பண்பாடும் மானுட நுண் உணர்ச்சியும் நோக்கியே*
*அவன் பயணம் அமையவேண்டும்*
*சிற்றோடையின் நீர்த்துளிகள் நதியாக மாறி*
*நதியின் பிரவாகங்கள் கடல் சென்று*
*அடைவதைப் போல மனிதனின் எண்ணத்துளிகள்*
*ஒருமை பெற்று நேர்த்தியும் ஒழுங்குமாய் வடிவமைக்கப்பட்டு*
*சமூகத்துடன் கலக்க வேண்டும்*
*அகத்தின் புறப்பாடுகள் சமூக எண்ணங்களுடன்*
*பொங்கி சங்கமிக்க வேண்டும்*
*வீட்டிலிருந்து வீதிக்கும், வீதியிலிருந்து ஊருக்கும்*
*பரவிச் செல்லுதலே பரிணாமத்தின் வளர்ச்சி*
*இலைகள் வானத்தை நோக்கி தவமிருந்து*
*ஆதவக் கதிரொளியுடன் மரம் வளருதலுக்கு உதவுதலே போல்*
*தனிமனிதர்கள் பிற மனிதர்களுடன் உலக நகர்வுகளுக்கு*
*தம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்*
*மானுட உன்னதத்தின் மகிழ்ச்சித் திறப்புக்கு*
*அதுவொன்றே வழி*
*கண்டும் காணாமலும் பட்டும்படாமலும் மனிதர்கள் விலகி விலகிச்செல்வது*
*சமூகத்தை வளர்ச்சியுறவே வழிகோலும்*
*நாகரிகம் என்ற பேரில் தன் கூட்டுக்குள் சுருங்கிக் கொள்வது*
*எந்த ஒரு வகையிலும் சமூக விலங்கான மனிதனை மேம்படுத்தாது.*
*மேன்மையைக்கும்*
*வழி வகுக்காது*
*தீரா மொழிச் சிக்கல்களைத் தீர்க்க*
*சமூக விழுமியங்களே விடைகளை முன்னிறுத்தும்*
*ஏனோ தானோ எனச் செல்லாமல்*
*எதிர் காணும் சமூக நிகழ்வுகளை ஊடறுத்துச் செல்வதுடன்*
*அணைத்துச் செல்வதுமே சமூக மனிதனின் பெரும் கடமையாகும்*
*ஆமென்*

● பாரியன்பன் நாகராஜன்

# அம்மாவுக்குப் பிடிச்சதெல்லாம்



அப்பாவுக்கு
மிகவும் பிரியமென்று
வாரத்தில் இரண்டு நாட்கள்
வத்தக்குழம்பு வைக்கிறாள்
அம்மா.
மழைநாளில்
மாலை பில்டர்காபியோடு
தாத்தாவுக்கு
வெங்காயபஜ்ஜி பிடிக்குமென்று
செய்து தருகிறாள்.
அக்காவுக்குப்
பிடிக்குமென்று நேற்று
கத்தரிக்காய் கூட்டும்
பருப்புத்துவையலும்
செய்து கொடுத்தாள்.
தம்பிக்கு
தயிர்வடை விருப்பமென்று
ஒவ்வொரு சனிக்கிழமையும்
செய்துதருகிறாள்.
எனக்கு
மிகவும் பிடிக்குமென்று
வாரத்தில் மூன்று நாள்
மத்திய சாப்பாட்டுக்கு
புளியோதரை செய்து தருகிறாள்.
பக்கத்து வீட்டு
பார்வதியக்கா மகன் ஜீவாவுக்கு
பண்டிகை நாட்களில் எது செய்தாலும்
கொடுத்திடுவா.
அம்மாவுக்குப் பிடித்ததை
இதுநாள்வரை செய்ததேயில்லை.
நாங்க கேட்டாலும் சொன்னதேயில்லை.
அம்மாவுக்குப் பிடிச்சதெல்லாம்
எங்கள் எல்லோருடைய
விருப்பமும் மகிழ்ச்சியும் மட்டுமே...!


● இளையவன் சிவா,
மடத்துக்குளம்

இயற்கையை வரைந்தபின்
பட்டாம்பூச்சிகள்
பறக்க ஆரம்பிக்கும்
கனவுகளை வர்ணித்தபின்
வரலாறு தன்னை
புதுப்பிக்கத் தயாராகும்
குடும்பத்தை நேசிப்பதை
குதூகலமாய் சொல்கையில்
அன்பு
இறக்கை விரிக்கும்.
சக உயிர்களை மதிக்கையில்
இமயத்தின் உயரம்
சற்றே இறங்கி நிற்கும்
வகுப்பில்
குறும்பும் சிரிப்புமாய்
வலம் வரும்
ஏழாம் வகுப்பு நிஷாவுக்கு
உலகம்
சுருங்கி ஒற்றைக் குடிசைக்குள்
ஒளிந்துகொண்டது
அமில மழை
பொழிவேன் என
அடுத்த வீட்டு பையன்
அச்சுறுத்திய அன்றே.

# பூமர் அங்கிள்

● நௌஷாத் கான்.லி

இதுங்களெல்லாம் புள்ளைங்களா எப்படி கண்ணு,மண்ணு தெரியாம வண்டிய ஓட்டிக்கிட்டு திரியுதுங்க.இதுல வேற அந்த எடுபட்ட பய டி.டி.நேசன் வேற பசங்கள உசுப்பேத்துற மாதிரி யூடியூப்ல வீடியோ போட்டுக்கிட்டு திரியுறான்.வருங்கால பிள்ளைகளைநாசம் படுத்தி,தப்பான வழிகாட்டுதலுக்கு கொண்டு போற இந்த மாதிரியான தர்தலைகளை எல்லாம் இந்த காவல்துறை மாவு கட்டு போட வைக்காது.கோயில் வாசல்ல அஞ்சுக்கும்,பத்துக்கும் பழமும்,குங்குமமும் விக்கிற ஏழை ஜனங்களை தான் பொது இடத்துக்கு இடையூறா இருக்காங்கன்னு கடைய அடிச்சி,நொறுக்கி தங்கள் நீதி,நேர்மையை நிலைநாட்டுவாங்க.



போனவாரம் என்னடான்னா இந்த ஏரியா கவுன்சிலர் சும்மா டம்மி பைப்ப நட்டு தண்ணி பைப் போட்ட மாதிரி கணக்கு காட்டினதை கண்டித்து வீடியோ போட்ட அந்த அப்பாவி பசங்க மேலயே போலீஸ் கேஸ் போடுது.

இங்கே அநியாயத்துக்கு கிடைக்குற தப்பான நீதி கூட நியாயத்துக்கு துளி கூட கிடைக்க மாட்டேங்குது என பொறுமி தள்ளினார் ராமசாமி

யோவ் ராமசாமி அநியாயத்துக்கு நல்லவனா இருக்காதே,போலீஸ் அந்த பசங்க மேல தானே கேஸ் போட்டு இருக்கு,அந்த பசங்களை வெளிய எடுக்கிறதுக்கு அவங்க அப்பா,அம்மா இருக்காங்க நீ உன் வேலைய மட்டும் பார்க்கிறது நல்லது.

அந்த பசங்க பொதுநல விஷயத்துக்காக தானே அப்படி செஞ்சாங்க,தப்பு செஞ்ச அந்த கவுன்சிலரை விட்டிட்டு அந்த அப்பாவி பசங்க மேல கேஸ் போடுறது தப்பு இல்லையா?

தப்பு தான் ஆனா அதிகாரமும்,பதவியும் இருக்கிறவன்கிட்ட நாம்ம அடங்கி தானே போகணும்.

இங்கே தப்பு,சரின்னு எதுவுமே இல்லை.நமக்கு நல்லது நடக்கும்ன்னா என்ன வேணும்ன்னாலும் செய்யலாம்.

அதுக்காக நம்ம கண்ணு முன்னாடி தப்பு நடந்தா கைய கட்டி,வாய பொத்தி வேடிக்கையா பார்க்கணும்.

அடுத்தவன் கஷ்டப்படுறதை பார்த்து நாம்ம மட்டும் எப்படிடா சந்தோசமா இருக்கமுடியும்.

இங்க பாருடா ராமசாமி இப்படியே பேசிக்கிட்டு திரியாதே ஏற்கனவே நம்ம ஏரியாவுல உன்னை பூமர் அங்கிள்ன்னு இந்த ஏரியா 2கே கிட்ஸ் எல்லாம் கிண்டல் பண்ணிட்டு திரியுறானுங்க.

யார் என்ன சொன்னா என்ன பாலு,நாம்ம நல்லதை விதைச்சுக்கிட்ட இருப்போம்.

லாஸ்ட் வீக் நம்ம ஏரியா தனஞ்செயன் மவன் பைக் ஆக்சிடண்ட்டுல கீழ விழுந்து கை,கால் உடைச்சுகிட்டதுக்கு எவ்வளவு அக்கறையா ஹார்லிக்ஸ் வாங்கி கொண்டு போய் பார்த்தது மட்டுமின்றி கூட பொறந்த சகோதரன் பையன் மாதிரி எவ்வளவு அறிவுரை சொல்லிட்டு வந்த,ஆனா அந்த பையன் பூமர் அங்கிள் காதுல இரத்தம் வர்ற மாதிரி அட்வைஸை அறுத்து தள்ளிட்டாருன்னு என் காது படவே அவன் நண்பனுக்கிட்ட பேசி சிரிச்சதை கண்டு எவ்வளவு வருத்தப்பட்டேன் தெரியுமாடா?

விட்டு தள்ளுடா பாலு,அவனுங்க எல்லாம் சின்ன பசங்க,ஒரு ஏஜ் வந்தா அவனுங்களுக்கே மெச்சூரிட்டி வந்திடும்.

இவ்வளவு சொல்லுறேன் உனக்கு கோபமே வரலையடா.

எதுக்குடா கோபம் படணும்.நாம்ம வாழுறது ஒரு வாழ்க்கை அதுவும் நிரந்தரம் இல்லாதது.நம்ம வாழ்க்கை எப்ப முடியும்ன்னு அந்த ஆண்டவனுக்கு மட்டுமே வெளிச்சம் அதனாலே வாழுற வரைக்கும் நம்மால் முடிந்த நல்லதை விதைச்சுக்கிட்டே இருப்போம்.

சரிடா இதை கூட விடு,இது நம்ம ஊரு பிரச்சனை,இது நம்ம சமூக மக்கள் பிரச்சனை.நார்த் இந்தியாவுல ஏதோ ஒரு சிறுபான்மை இனத்து பொண்ணை நம்ம மதத்தை சார்ந்த சிலர் மதவெறி காரணமாக கூட்டு பாலியல் பலாத்காரம் பண்ணி,அவங்க குடும்பத்தை நாசம் செஞ்சாங்க,குற்றவாளிகளுக்கு தண்டனை கூட பெருசா கிடைக்கலை,சீக்கிரமா அந்த குற்றவாளிகள் ரிலீசும் செய்யப்பட்டாங்க.

பாதிக்கப்பட்ட பொண்ணு நம்ம மதமும் கிடையாது,நம்ம ஊரும் கிடையாது.

விஷயம் இப்படி இருக்க அந்த பொண்ணுக்கு அரசு இழைத்தது அநீதி,குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்ன்னு நம்ம மதத்துக்கு எதிராகவே நீ சமூக வலைத்தளங்களில் பொங்குவது சரியா?

இங்கு பாருடா பாலு தப்பை யார் செஞ்சாலும் தப்பு தான்.மனிதர்களை மதம் கடந்து மனிதத்தோடு நேசிக்க வேண்டும்.நான் தப்பு செஞ்சவனுக்கு தான் தண்டனை கொடுக்கணும்ன்னு சொல்றேன்.எந்த மதத்தையும் இழிவு படுத்துறது என் நோக்கமல்ல.

இங்கே அமர் தப்பு செஞ்சாலும் தப்பு தான்,அப்துல்லா தப்பு செஞ்சாலும் தப்பு தான்.குற்றவாளிகளையும்,குற்றத்தின் பின்னணியும் பாருங்க.தப்பு பண்ணவன் எந்த மதம்,எந்த மொழியெல்லாம் ஆராய்ச்சி பண்ணாதீங்க.

சரிப்பா,சரிப்பா உன்கிட்ட எல்லாம் பேசி ஜெயிக்க முடியாது.சரி எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு.இன்னொரு

நாள் சந்திப்போம் என்று ராமசாமியிடம் கை கொடுத்து விட்டு சென்றார் பாலு.

அன்று இரவு பலத்த மழை விடிகாலை எழுந்து பார்த்த ராமசாமிக்கு பலத்த அதிர்ச்சி ஏனென்றால் ஒரு நாள் மழைக்கே முட்டிக்கு மேல் மழை நீர் தேங்கி இருந்தது. அந்த தெருமக்கள் எவ்வளவு முறை போன் செய்தும் முனிசிபாலிட்டி ஆட்கள் வந்த பாடில்லை. இவ்வளவு தண்ணீர் தேங்கி இருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அந்த ஏரியாவில் பரவலாக குழியையும் தோண்டி வைத்து இருந்தார்கள். ஏன் வெட்டினார்கள், எப்போது மூடுவார்கள் என்பது அந்த கான்ராக்ட் எடுத்தவருக்கே வெளிச்சம்.

முனிசிபாலிட்டி ஊழியர்களை மட்டும் நம்பி இருந்தால் வேலைக்கு ஆகாது, இந்த ஏரியாவுல எத்தனை சின்ன குழந்தைகள் இருக்கு, ஒரு பால் வாங்கணும் என்றால் கூட இந்த தெருவை கடந்து சென்றால் தானே முடியும் என்று வருத்தப்பட்டார் ராமசாமி.

ஒரு பெரிய கம்பியை எடுத்து கொண்டு சாலை சாக்கடை ஓரத்தில் கசடு நிறைந்திருக்கும் பகுதியை தன் கைகளாலேயே கூட்டி, அள்ளிப்போட்டார். அப்போது தேங்கியிருந்த தண்ணீர் கொஞ்சம், கொஞ்சமாக ஓட தொடங்கியது. அப்போது மேல தொங்கி கொண்டிருந்த மின் கம்பி அறுந்து ராமசாமி மேல் விழுந்ததில் சம்பவ இடத்திலேயே அவரது உயிர் பரிதாபமாக போனது.

சில மணி நேரங்களுக்கு பிறகு

யோவ் அந்த ஏரியாவுல உள்ள மின்கம்பிகளையெல்லாம் உடனே மாத்துங்க, பெரியவர் மாரடைப்பால் தான் இறந்தார்ன்னு கமுக்கமா கேஸை முடிச்சிடுங்க. இந்த விஷயம் மீடியாவுக்கு எல்லாம் வரக்கூடாது. சம்பந்த பட்ட குடும்பத்திடம் இந்த விஷயம் பத்தி பேச்சு, மூச்சு விடக்கூடாதுன்னு சொல்லுங்க. மீறி பேசணும்ன்னு சொன்னாங்க அவங்க வீடு பொது இடத்துல அஞ்சு அடி இருக்குன்னு சொல்லுங்க ஏதாவது வாய் தொறந்தா வீடு இடிபட்டு போவும்ன்னு மிரட்டுங்க.

நிறைய இடங்களில் மின் கம்பி சரி இல்லைன்னு எதிர்க்கட்சி சட்டசபையில கேள்வி எழுப்புன்னா அதுக்கெல்லாம் அணில்கள் தான் காரணம்ன்னு சொல்லுங்க.

டீக்கடைக்காரர் டீ குடிக்க கூப்பிட்டும் கூட ராமசாமி இல்லாமல் அந்த கடைக்கு செல்ல பாலுவுக்கு மனம் வரவில்லை.

அப்போது சுவற்றில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரில் உதித்த சூரியன் ஒளிப்பட்டு பூமர் அங்கிள் ராமசாமி பிரகாசமாய் காட்சியளித்தார்.

● சரஸ்வதிராசேந்திரன்

## மண்ணிலெங்கே மாண்பு

கொடுத்துதவும் எண்ணமில்லாத
கொள்கையற்ற அற்பர்கள்
அடுத்தடுத்து கெடுப்பதே
அன்றாட செயல்கொண்டோர்

கூடிவாழும் தன்மையில்லார்
தேடி அலைகிறார் அமைதியை
நாட்டை நலமாக்காமல்
வீட்டை வளமாக்குகிறார் சிலர்

உண்மை பேசுபவன்
உளறுவாயன் உலகில்
எண்ணம் சுத்தமில்லாதவனுக்கு
எடுப்பார் விழாக்கள்

கல்விக் கூடமெல்லாம்
காமாந்தர கூடமாகின
மண் அள்ளியள்ளி
மலடானது நதிகள்

காந்தி வாழ்ந்த நாட்டில்
சாந்தி இல்லையின்று
தேரோடும் வீதியெல்லாம்
சாராய நீரோடுது

பொதுநல மேம்பாடுமறந்து
தன்னல மேம்பாட்டில்
தனிசுகம் காண்கிறார்
வன்முறையால் வளமழிக்கிறார்

எத்தர்கள் நிறைந்த
இத்தரையில் மனிதரில்லை
மனிதரெல்லாம் புனிதராகும்போது
மண்ணில் வரும் மாண்பு.

● ஹரணி, தஞ்சாவூர்-2

# ஹரணி கவிதைகள்...

நன்றாய் மழையில் நனைந்து
திரும்பியது அப்பாவிற்குக்
கொள்ளி வைத்துவிட்டு...

அப்புறம் நனைந்த மழைநாள்
எனக்கான வேலையை
இழந்தபோது...

இடைவெளிவிட்டு மீண்டும்
நனைந்த மழைப்பொழுதில்தான்
தூக்கிட்டிறந்த நண்பன்
கழுத்துக்கயிறறுத்து
சுமந்தது...

வெகுவாண்டுகளை கரைத்தபின்
இப்போது பெய்யும் மழையில்
நனைகிறேன்
எந்தக் காரணமும் எதுவுமில்லாமல்
மழையாவது நனைக்கட்டும்
உடலோடு மனத்தையும் சேர்த்தென்று..

நிதானம் ஒரு
பறவையாக உருவெடுத்திருக்கிறது
சிறகுகளைக் கோதுகிறது
பறக்கவும் எத்தனிக்கிறது
இலக்குகளைப் புரிந்துகொள்ளவில்லை
பறக்கும்போதே முடிவெடுக்கலாம்
என்கிறது..
அலகைக் கொண்டு காற்றில்
சுவடுகளைப் பதிக்கலாம் என்றும்
கால்களின் இடுக்கில் உள்ளதை
முழுபூமியென்றும்
பொறுபொறு என்கிற மனத்தைப் பார்த்துப்
புரிந்துகொள்ளாத எந்தவொன்றையும்
அடையமுடியாதென்றும் மறுதலிக்கிறது..
ஏற்கவும் கருதவில்லை
நிதானத்தின் புது அவதாரம்
இனிமேல் இப்படித்தானென்கிறது
கைமீறி மனங்கடப்பதைத்
தடுத்துவிடமுடியாது
சில தருணங்களில் நிதானத்தை
இப்படித்தான் பழக்கிவிடவேண்டியிருக்கிறது
எல்லாவற்றையும் கடக்க
அல்லது கடக்காதிருக்கவும்.



சலித்துக்கொள்கிறாள்
அந்த இளம்பெண்
அஞ்சல் தரும் பெண்ணவள்
உங்கள் ஒரு வீட்டுக்காக
தினமும் வரவேண்டியிருக்கிறது
கைப்பேசியைப் பயன்படுத்த
மாட்டீர்களா? என்கிறாள்

தெருமுழுக்கக் கடிதங்கள் நிறைந்து
கிடந்த வாழ்க்கையை மனத்திலிருந்து
எடுத்து அவளுக்குரைப்பதற்குள்
சலிப்பாகவே தெருகடந்து
மறைகிறாள்..

சிறகு வகைகள்
தெருக்களில் உதிர்ந்து கிடக்கின்றன
எந்தப் பறவையினுடையதாக இருந்தாலும்
அவற்றை மீண்டுமெடுத்துப்
பொருத்தக் காற்றெடுக்கும்
முயற்சியில் களைத்துப்போகிறேன்
கசிகிறேன்..

● மா. சித்திவினாயகம்

# மரண ஒத்திகை!

பொய்யான உலகென்று
புலம்புவதைத் தவிர
எது இங்கு நிஜம்?

எல்லாம் ஒருநாள்
அழிந்து படுமெனில்
எதைத் தான் நம்புவது?

பிடித்த உறவுகளை உயிரோடு
காணாமலே இறப்பில்
கலக்கிற சம்பிரதாயமாக்கி
வைத்திருக்கிறது புலப் பெயர்வு!

தூரத் தொலைந்த அனைத்துப்
புலம் பெயர்ந்தோடியின்
மனமும் துயரமும் இது!

இப்படித்தான்
சென்ற மாதம்
அவன் இரண்டு தடவைகள்
என்னைத் தொலை பேசியில்
அழைத்திருந்தான்...

வழமையான அழைப்பு
என்று அசட்டையாயிருந்தேன்.
இன்று அவன் இல்லை
எதையாவது சொல்ல
வேண்டுமென்று
என்னை அழைத்திருப்பானோ?
எதை அவன் சொல்லியிருப்பான்?
மனம் தவிக்கிறது!

அவன் பழங்கதைகள் பேசுபவன்...
தம் பிழைப்பு நடாத்த
வகுப்பெடுக்கும்
வாத்திமாருள் பிரம்பெடுத்து
எப்படி வாழ்வது என்று
வாழ்வைக் கற்பித்த தன்
நல்லாசிரியனின் பெருமை பற்றி...

கண்எட்டாத் தொலைவில்
வண்ணாத்தியாய்ச் சிறகடிக்கும்
பிள்ளைகளை
விழிமூடும் வரை கண்ணீருள்
தேடிய
அன்னைகள் பற்றி...
தாமளாப்பில் தான் கண்ட
கொள்ளிவாய்ப் பேய்பற்றி...
நீண்டு வளர்ந்த ஐந்து வட்டுப்
பனைபற்றி...
வெள்ளையன்
கொடிபிடித்தாட்டிய
குவிந்தா பற்றி...
தன்னுலை வைக்க
ஊரெரிக்கத்துடிக்கும்
சாதி மனிதர் பற்றி...
வேரோடு பிடுங்கி எறியப்பட்ட
ஊர்ப் பனைகள் பற்றிஞ்.
எதற்கெடுத்தாலும் வாலாட்டும்
வாலாட்டிக் குருவிகள் பற்றி...
எதை வேண்டுமானாலும்...
எதை வேண்டுமானாலும்
பேசுவான்.

இன்று அவன் இல்லை.

இலாபம் அற்று
நட்பின்
வெறும் பேச்சைக் கேட்கவும்
ஒருவன் இருக்கிறான் எனில்
அதைவிடப் பாக்கியவான்
இவ்வுலகில் எவன்??

ஆனால் இன்றோ
ஒருவரோடு ஒருவர்
மனம் விட்டுப்
பேசவதற்கென யாருளர்??

இது தான்
தனிமையின் கொடூரம்.
இன்று நானும்
தனிமையில்.. நான்
காட்டிய அன்பும்
தனிமையில்.. என்
வாழ்வும் தனிமையில்..!

இன்பத்திலும் துன்பத்திலும்
மனம் விட்டுப் பேசாத
தனிமையின் கொடூரம்
என்னைப் பைத்தியம்
ஆக்கிக்
கொண்டிருக்கின்றது..

ஆனால் நீயோ அமைதியாக
கிடந்து வேடிக்கை மட்டும்
பார்த்துக்
கொண்டிருக்கிறாய்
நண்பனே!

இது தான் எனக்கான
தண்டனை என்று
நினைத்தாயோ??
மலர் வளையத்தோடு
நீ தான் என் நண்பன் என்று
அடுத்தவர்களின்
ஒப்புதலுக்காக
அஞ்சலி செலுத்துகிற
வேளை
உண்மையில்
குற்றவுணர்வில்
குறுகிப் போகிறேன்
எதையும் அறியாது
நீ உறங்கிக் கிடக்கின்றாய்.
தூக்கத்திற்குப் பெயர்
உறக்கம் மட்டுமா??
நான் எனக்கான
மரணத்திற்கான ஒத்திகையை
உன்னில் பார்க்கின்றேன்



● யாழ்.எஸ்.ராகவன்

காற்றின் திசைகளில்
வாசத்தை அடவுகட்டும்
பூக்கள் மலர்ந்த காலையில்
உன்னில் தடதடக்கும்
இதயத்துடிப்பு உனக்கானதல்ல
என
நீ உணர்ந்தபொழுதில்

ஒரே ஒரு முறையேனும்
உன் சுயத்தை சொல்லிவிட
விட சமயம் பார்க்கிறாய்

உன் குறு நகையில்
ஒளிந்திருக்கும் ஸ்தூலத்தையே
பார்த்துக் கொண்டிருக்கிறேன்

கோலத்தில் தொடங்கி
மருதாணி வரை
யாவற்றையும்
தவமாக்குகிறாய்

எப்போதும் ருசிகளை
பரிமாறும் நீ
விரதமேற் கொள்ளவதை
வேடிக்கை பார்க்கிறது
அந்த பொம்மை

எல்லாக் கூடைகளையும்
பூக்களால் நிரப்பும்
உனது விரல்களின்
ஸ்பரிசத்தில் ஸ்படிகமாகிறேன்.

● சாய் கபாலீசுவரன்....

# மழை சில்லி...

மேலைக் காற்றில் மிதக்கும் மேகங்களே
வெய்யோனில் வெந்து
கருகியகரு முகில்களே;

வானமொழி வாய்மொழிந்து
வாரி வழங்கும் மழைமொழி,
உயிரின் அழகிய மறைமொழி,

தளிராடிய இலையில் முத்தமிடவே
பூமிக்கு வருவது ஏனோ;
மாரியில் மாறும் காலம்
மனதில் நுழைந்த மாயம்;

சிரித்து சிந்தும் மழை
சில்லி விழுவது,
என் கவி எழுவதற்கா இல்லை
உன்னை என்
கவியில் எழுதுவதற்கா,

என்னில் உன்னை படைப்பதற்கா
உன்னில் என்னை தேடுவதற்கா,
மண்ணில் கரைவதற்கா
தண்ணீரில் கலப்பதற்கா;
நினைத்த நினைவுகளின்
நனைப்பதற்கா,

பொத்தல் விண்ணில் பிறந்த நீ,
பொட்டல் மண்ணில் இறந்து
போவது ஏனோ!..

● ந க துறைவன்

# ந க துறைவன் கவிதைகள்

## பனி

*புகை மண்டலமாய் பனி*
*பூக்கள் மீது ஈரத்துளிகள்*
*இதழுகளுக்கு குளிர்*
*போர்த்திக் கொள்ள ஏதுமில்லை*
*சூட்டை உணரத் தெரியாமல்*
*வண்ணத்துப்பூச்சிகள்*
*வந்து வந்து போகின்றன*
*காற்றின் ஸ்பரிசம் சுகம்*
*தேன் உறிஞ்சும்*
*வண்ணத்திக்கு பேரின்பம்*
*இன்னும்*
*அந்த மார்கழித் பனி*
*விலகாமல்...!!*

## வீடு

*நேற்று வரை*
*அது என் தாத்தா வீடு*
*இன்று அதுவே*
*என் அம்மா வீடு*
*நாளை அது*
*என் வீடாக இருக்குமோ?*
*அல்லது*
*வேறு யாருடைய*
*வீடாக இருக்குமோ?*
*தெரியாது*
*நல்ல விலைக்கு விற்கப்படுமா?*
*யாரின் கைக்கு மாறிடுமோ?*
*தெரியாது*
*ஓ... வீடு என்பது*
*ஒரு தற்காலிக குறியீட்டு*
*அடையாளமோ?*
*அது சரி*
*எதுதான் எனக்கான*
*சொந்த வீடு?*

## தேடல்

*உன்னை எங்கெல்லாம்*
*தேடுவது?*
*இங்கேயா இருக்கிறாய்.*
*இங்கே இருக்கிறாய் என்று*
*தெரிந்திருந்தால்,*
*நேற்றே வந்து பார்த்திருப்பேனே?*
*நேற்று இங்கே இருந்தேன்*
*இன்று தான் இங்கில்லை*
*இப்பொழுது எங்கிருக்கிறேன் என்று*
*உன்னில் தேடிப் பார்*
*அங்கே இருக்கிறேனா?*
*நீ தேடும்*
*அந்த நான்.*

## சுண்டு விரல்

*சிறுவனாக இருந்த போது,*
*அப்பாவின் சுண்டுவிரல்*
*பிடித்து நடந்த மகன்*
*திருமணத்தின் போது*
*மனைவியின்*
*சுண்டு விரல் பிடித்து நடந்த கணவன்*
*தாத்தாவின் சுண்டு விரல் பிடித்து*
*பார்க்கில் உலா வந்த பேத்தி*
*இப்பொழுது*
*அந்த சுண்டு விரல்*
*பிடித்து நடந்த கவனமே*
*தற்போது எவருக்கும் வருவதில்லை.*

# நூல் அறிமுகம் : நெடுஞ்சாலை வாழ்க்கை

## ● பிரேமா இரவிச்சந்திரன் சென்னை

உலகம் முழுதும் உள்ள நாடுகளை இணைப்பது வணிகம். பண்டங்களை பரிமாற்றிக் கொள்வதையே வணிகம் என்கிறோம். இதற்கு முக்கிய காரணியாக இருப்பவர்கள் பொருள்கள் இடம்பெயர பேருதவியாக இருப்பவர்களே! இவ்வகையில் முக்கிய இடத்தில் இருப்பவர்கள் கனரக வாகனங்களின் ஓட்டுநர்கள். இவர்கள் தொழிலில் அன்றாடம் சந்திக்கும் பெரும் துயரங்களுக்கு மத்தியில், குறைந்தபட்ச கோரிக்கைகளை மட்டும் முன்வைத்து ஓரிரு நாட்கள் போராட்டங்கள் நடத்தும் பொழுது," ஏதோ லாரி ஓட்டுநர்கள் இரண்டு நாட்கள் ஸ்ட்ரைக்காம்". என ஒரு வரியில் அவர்களது பிரச்சினையை பேசி விட்டுப் போகும் சாதாரண மக்களும், லாரி டிரைவர் என்றாலே சமூகத்தில் தொழில் ரீதியாக குணாம்சம் ரீதியாக கீழாக வைத்து பார்க்கும் பார்வை கொண்டவர்களும் இவர்களின் இன்னல்களையும், இவர்களும் ஈரம் குறையாத மனதுடைய மனிதர்களாகவே வாழ்கிறார்கள் என்பதையும் புரிந்து கொண்டாலே அதுவே இப்புத்தகத்தின் வெற்றி தான்.

நம் நாட்டின் கருப்பு ரத்தநாளங்களான நெடுஞ்சாலையில் நூலாசிரியர் கா. பாலமுருகன் சேலத்தில் தன் பயணத்தை கனரக வாகன ஓட்டுநர்களுடன் ஆரம்பித்து, இந்தியாவின் பிற மாநிலங்களின் ஐந்து இடங்களுக்கு தனித்தனி பயணமாக மேற்கொண்டு தன் அனுபவங்களை புகைப்படங்களுடன் துல்லியமாக இந்நூலில் தந்திருக்கிறார். பிற்காலத்தில் வான ஊர்தியை இயக்கும் பைலட்டாக ஆகப் போகிறேன் என்பவர்களை பெருமையாக பார்க்கும் நாம், பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகிக்கும் தரைவழி போக்குவரத்து ஊர்தியான லாரியின் ஓட்டுனராக ஆகப்போகிறேன் என்பதை முகம் சுளித்தே பார்க்கிறோம்.

அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ இத்தொழிலுக்கு வருபவர்களின் பயணத்தில் ஏற்படும் இன்னல்களை களைய தேசிய நெடுஞ்சாலைகளுக்கு தனிப் பாதுகாப்பு ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் இந்நூலில் ஆசிரியர் எழுதியிருக்கிறார். கைக்கும் வாய்க்கும் பற்றாக்குறையாக இருக்கும் இவர்களை நம்பி தேசிய நெடுஞ் சாலைகளில் ஏராளமான ஹோட்டல்கள், ஒர்க் ஷாப்,பெட்ரோல் பங்க், பஞ்சர் கடை, டீக்கடை ஸ்டேஷனரி, துண்டு லுங்கி விற்பவர்கள்,வேர்கடலை வியாபாரம் பார்ப்பவர்கள் என இவர்களது பட்டியலும் நீளுகிறது.

ஒரு நூறு ரூபாய் தாளுக்காக தன் இளமையை வறுமைக்காக இவர்களிடம் விற்கத் துணியும் இந்திய பெண்களின் நிலை இன்னும் வலிக்கிறது. இவர்களை சந்திக்கும் வாய்ப்பிலிருக்கும் ஓட்டுநர்களுக்கு எவரும் பெண் கொடுக்க முன்வருவதும் இல்லை என்பது இவர்கள் சந்திக்கும் மற்றொரு அவலம்.

பல மாநிலங்களை கடந்து தொடர் பயணம் மேற்கொள்ளும் இவர்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்கொள்ளும் ஒவ்வொருவிதமான இன்னல்களும், வழிப்பறி கொள்ளையில் இவர்களுக்கான பாதுகாப்பின்மையும், அங்கங்கே எதிர்பாராமல் காவல்துறையினருக்கு கையூட்டும், போலியாக இவர்கள் வண்டியில் அடிபட்டதாக நாடகம் நடத்தி பணம் பறிப்பதும் என இவர்கள் சந்திக்கும் யாரும் பேசாத ஏராளமான பிரச்சனைகளை இப்புத்தகம் பேசுகிறது.




அசோக மாமன்னர் அவர் காலத்தில் தலையிலோ தோளிலோ சிறு மூட்டைகளை சுமந்து நடைபயணமாக செல்லும் பாதசாரிகளான தன் மக்களுக்காக சாலைகளை அமைத்தார்.சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களை நட்டார். குளங்களை வெட்டினார்.சத்திரங்கள் சாவடிகளை கட்டினார் என்பது நினைவிற்கு வருகிறது.மாநிலங்களின் எல்லையில் அமைந்திருக்கும் பெயர்ப்பலகை மட்டுமே இவர்களை இனிதே வரவேற்கிறது. நெடுஞ்சாலை பயணம் அவ்வாறு இல்லை என்பதையே இந்நூல் காட்டுகிறது. 10 டன் பாரமுள்ள கனரக வாகனத்தில் 20 டன் பாரங்களை ஏற்றிச்செல்லும் இவ்வோட்டுநர்களின் நிலை மாற, இந்நூல் முன்னெடுத்துச் செல்லும் படியாக இருக்கிறது.மனதை பாதித்த புத்தகம்.

● வித்யாசாகர்

# அவளொரு வெளிச்சம் போன்றவள்..

*உயிரே..*
*யார் நீ? தெரியாது*
*தெரிய நான் முயலவில்லை*
*எனக்குப் பயணம்; இந்தக் காற்றைப்போல*
*வெளிச்சத்தைப் போல*
*கடல் பாயும் நதியாக நீள்கிறது.*
*இடையே கேள்வி இல்லை*
*நீ யாரென்று.*
*சிந்திக்கவேயில்லை*
*நீ யாரென்று.*
*எனக்கு நீ பெண்ணாக இருக்கிறாய்*
*ஆணாகவும் இருக்கிறாய்*
*உறவாக இருக்கிறாய்*
*நட்பாகவுமிருக்கிறாய்,*
*காதலூருகிறது; அன்பு நிறைகிறது;*
*உயிர் நிறைக்கிறாய் என்னுள்.*
*நான் தேடாமலே*
*காணுமிடமெல்லாம் காண்கிறேன் உன்னை*
*பிறகு, எங்கு நான்; நீ யாரென்று கேட்க?*
*காற்றைச் சுவாசிக்கும்*
*லப்டப் போல*
*உள்ளே இசைக்கிறேன் உன்னை*
*உயிர்வரை தொடுகிறாய்*
*வீணையைப்போல மீட்டுகிறேன்*
*உள்ளே ஆனந்த ஒலி யெழுப்புகிறாய்*
*பரவசம் ஒளிர்கிறது எங்கும்*
*எல்லாம் நினைவில் நிகழ்கிறது*
*உணர்வில் தெரிகிறது*
*கனவு இல்லை*
*பொய் இல்லை*
*அப்பட்டமாய் நிகழ்கிறது; உன்மத்தம் கொள்கிறாய்*
*ஏதோவொன்று மறைந்து*
*ஏதோ ஒன்றாக மாறுகிறது*
*ஆனால் அது நீயில்லை, அவளில்லை, அவன் மட்டுமுமில்லை*
*எல்லோரிடமும் நிகழ்கிறது உனக்கான அன்பு;*
*மழை சோவென்று பெய்யும் குளுமை*
*கற்பூரம் எரிந்து சுவாலை அசையும் நளினம்*
*ஒரு சிநேகத்தோடு பூனை பார்க்கும் கனிவு*
*நாயொன்று வாள் குழைத்து*
*ம்ம்.. ம்ம்மென்று துள்ளும் நேசம்*
*காற்றசைந்து தரையுதிரும் பூவிதழின் தொடுதல்*
*வானம் வெளுக்கத்துவங்கும் காலையில்*
*இலையுதிர்க்கும் பனித்துளி ஈரம்*
*கடல் தள்ளும் நுரை வெடிக்கும் சத்தம்*
*கரையும் காகம்; பறக்கும் கிளிகள்; எங்கோ*
*பேசிக்கொண்டேயிருக்கும்*
*ஊர்க்குருவியென எல்லாம்*
*நினவுபடுத்திக் கொண்டேயிருக்கிறது உன்னை*
*உன்னிடம் மனம் பேசுகிறது*
*அதுவாக நீரில் ஊரும்*
*ஒளி போல்*
*உணர்வுள் அணி செய்கிறது*
*அழகு பூக்கிறது*
*அன்பின் உயிர் சத்தம் கேட்கிறது*
*உனக்குள்ளும்*
*எனக்குள்ளும்*
*ஏதோ நிகழ்கிறது*
*நீ யார்?*
*நீ நதியாகிறாய், இசையாகிறாய்*
*வண்ணம் தெளிக்கிறாய்*
*வானில் பறக்கிறாய்*
*மண்ணுள் துளிர்க்கிறாய்*
*மழையில் நனைகிறேன் நீ நனைகிறாய்*
*பேசுகிறேன் நீ பேசுகிறாய்*
*யார் யாரோ போல் தெரிகிறாய்*
*எங்கும் அன்பு எதிலும் அன்பு*
*அன்பொன்றே வேதம் அன்பொன்றே அழகு*
*அன்பு மட்டுமே எல்லாம்போல்;*
*நீயும் அப்படித்தான்*
*அன்பின் ஆழம் நீ*
*அன்பின் அழகு சொட்டும்*
*நீர்த்துளி நீ*
*ஒரு காற்ருக்குமிழ் வெடித்து சிதறும்*
*மாயமற்ற வண்ண யெழில்;*
*கொஞ்சம் நில்லேன்,*
*எப்படியோ,*
*உணர்வின் உயிரிழை போல் இசையும்*
*சில உன் நினைவை சுமக்க*
*மனம் மறுப்பதேயில்லை*
*கொஞ்சமும் சலிப்பதுமில்லை*
*காதல் நிகழ்ந்துகொண்டே யிருக்கிறது*
*உன்னிடம் அன்பு தீர்வதே யில்லை;*
*ஏன், சிலரிடம் இப்படி?*
*சிலரைக் காண்கையில் மட்டும்*
*ஏனிப்படி?*
*ஏன் இது நிகழ்கிறது? அறிவு சிந்திக்கத்தான் செய்கிறது*
*மனம் தான், மனம் தான், மனம் அது தான்*
*அது அப்படித்தான் போலும்,*
*அன்பின் தீ கனன்று எரியும் கிணறது மனம்*
*பேராழக் கடல்; அன்பை கடல்*
*அணைப்பதேயில்லை*
*அன்பு நீளும்...*
*இந்தக் காற்றும்*
*வெளிச்சமுமாய் நீளும்...*
*நீளட்டும்*
*நீ வா; போவோம்*
*நீயும் நானும் அந்தக் காற்றோடிருப்போம்*
*வெளிச்சத்தோடிருப்போம்*
*வானும் மண்ணும் போல*
*இப் பிரபஞ்சமெங்கும் நிறைந்திருப்போம்;*
*நீக்கமற!!*

● சா. கா. பாரதி ராஜா,

## முழு நிலவு

*அழகான முழு நிலவை*
*பிடிக்க*
*படியில் ஏறினேன்*

*குன்றின் மேலே*
*இருந்தது நிலவு*

*குன்றின் மீது ஏறினேன்*

*கோபுரத்தின் மேலே சென்றது*

*கோபுரத்தின் மேலே*
*ஏறி சற்றே குனிந்தேன்*

*கீழே*
*குளத்தில் விழுந்து கிடந்தது*

*ஆகா!*
*கீழேயே நிலவு*
*விட்டு விட்டோமே!*
*நினைத்த கனத்தில்*

*நிலவை*
*கால்களால் கலைத்து விட்டு*
*கடந்து போனான்*
*சிறுவன் ஒருவன்*

*விரக்தியில்*
*நிலவு எங்கே என்று*
*அருகிலிருந்தவனிடம் கேட்டேன்*

*என்னைப் பார்த்து*
*சொன்னான்*
*இரு நிலவுகளை*
*நான் இப்போது*
*கண்டு விட்டேன்*

*எங்கே? கேட்டேன்*

*எனக்கு நிலவை*
*காட்டிய அவை*
*உலகை காட்டுகிறது*
*உனக்கு!*

*நிலவுகள் குளிர்ந்தன*

● ஐ.தர்மசிங், நாகர்கோவில்

## இன்னொரு பெயர்”

*பசித்த குழந்தைக்கு*
*ஒரு வாய் சோறு*
*ஊட்டிப்பாருங்கள்*

*கிழிந்த ஆடை உடுத்தியவனுக்கு*
*ஒரு நல்ல ஆடை*
*கொடுத்துப் பாருங்கள்*

*காயம் பட்ட*
*ஒரு மனிதனுக்கு*
*மருந்துத் தடவிப் பாருங்கள்*

*குளிரில் நடுங்கும் ஒருவனுக்கு*
*ஒரு போர்வை*
*வழங்கிப் பாருங்கள்*

*ஆதரவற்ற ஒருவனை*
*“தம்பி“ என*
*அழைத்துப் பாருங்கள்*

*அந்த முகங்களில் மலரும்*
*அபூர்வமான மகிழ்வில்*
*நாமும்*
*தாய்மையை உணரலாம்*

*தாய்மை என்பது*
*ஒரு வார்த்தையல்ல*
*அது தியாகத்தின்*
*இன்னொரு பெயர்...*

# மீட்சி

● அ.முத்துவிஜயன்

*(இப்பநான் சொல்லபோற கதை கற்பனைக்கதைதான் ஆனால் விரைவில் உண்மையாகும் சாத்தியக்கூறுகள் அதிகமாகிவிட்டன)*



அம்மா உனக்கு நான் அந்த அதிர்ச்சியத் தரப்போறேன். அத எப்புடி நீ எடுத்துக்கப் போறன்னு தெரியல. உன்னோட கனவுலகூட நீ கற்பனை பண்ணிருக்கமாட்ட. இது நடக்கு முன்னு நாளைக்கிக்காலையில தயாரா இரு உன்ன ஒரு எடத்துக்குக்கூட்டிட்டுப்போறேன்னு மக சொன்னப்ப அவளால தன்னக் கட்டுப் படுத்த முடியல. என்னன்னு சொல்லித்தொலடி என்னால சஸ்பென்ஸ் எல்லாம் தாங்க முடியாது. நான் நைட்டுப்பூராம்தூங்க முடியாது சொல்லிருடா என் செல்லம்இல்லந்னு

கெஞ்சினா.

ஆனா அவ அதுக்குக்கொஞ்சம்கூட மசியல. எதுவும் சொல்ல மாட்டேன். ஏன்னா அது என்னாகும்னு எனக்கே தெரியாது. ஆசையக்காட்டிட்டு அப்புறம் ஒர்க்கவுட் ஆகலைன்னா மனசுக்கு கஸ்ட்டமாயிடும் ஒரு ராத்திரி பொறுத்துக்கம்மா ப்ளீஸ் ந்னா. இவ இப்புடித்தான் முடியாதுன்னா முடியாதுதான் அப்புடியே வளந்துட்டா...

போனகதையில ஏற்கனவே சொல்லியாச்சு இவளோட அப்பா இவள டாக்டர் ஆக்க கனவு கண்டு இறந்துபோய் இவ வைராக்கியமா குடும்பத்த தாங்க முடிவெடுத்தான்னு

அந்தப்பொண்ணு இஞ்சினியரிங் முடிச்சி வேலைக்கிப்போனா. அங்க இருந்து அவளை அமெரிக்காவுக்கு அனுப்புனாங்க. அவளோட அம்மா மொதல்ல யோசனை பண்ணுனாலும் இவளோட தைரியத்த பாத்து இவமேல நம்பிக்கை வைச்சி அனுப்புனா. அங்க போய் மூணு வருசம் ஆச்சு. அப்பத்தான் அவ கேட்டா அமெரிக்காவுக்கு வாரியாம்மான்னு. வறேன்னு சொன்னவன்ன பாஸ்போர்ட் விசா எல்லாம் அரேஞ்ச் பண்ணி கூட்டிட்டுப்போனா. அவளோட தம்பி தங்கச்சிகளை அவளோட பெரியப்பா வீட்டுல விட்டுப் பாத்துக்கச் சொல்லிட்டு அந்தப்பொண்ணோட ஊருக்குப்பயணமானா

அமெரிக்கா அவளுக்குப்புதுசாஇருந்துச்சு அவளுக்கு அது வித்தியாசமா இருந்துச்சு அந்த அனுபவங்களுக்குள்ள போகவேணாம் இப்ப. அம்மாகிட்ட அவங்க கல்யாண ஆல்பம் போட்டோ குடும்பத்தோட எடுத்த வீடியோ எல்லாத்தையும் எடுத்துட்டு வரச் சொல்லி ருந்தா. எதுக்குன்னு கேட்டப்ப பாக்கனும் போல இருக்குமா அப்பாவ போட்டோ வீடியோவில யாவது பாக்கலாம்ல அதான் கேட்டேன்னு சொன்னா. அமெரிக்காவில வீட்டுக்குவந்த வன்ன அதைத்தான் மொதல்ல கேட்டா கொண்டாந்துருக்கியாம்மான்னு

அம்மாவுக்குக்கோவம் வந்துச்சு. ஏண்டி இம்புட்டுத்தூரம் வந்துருக்கேன் தம்பி தங்கச்சி களை விசாரிக்கல. என்ன விசாரிக்கல. நு கோவிச்சிக்கிட்டா. சாரிம்மான்னு சொல்லிட்டு பேருக்கு விசாரிச்சா. ஆனா அந்தப்போட்டா வீடியோ எல்லாத்தையும் பாத்துட்டு பரபரப்பாயிட்டா.

ஒருவாரம் போய்டுச்சு. அதுக்கப்புறம்தான் இந்த விசயம் சொன்னா. நாளைக்கிக் காலையில போறோம்னு. கௌம்பும் போது சொன்னா ஒனக்கு ப்புடிச்சமாதிரி டிரஸ்பண்ணிக்க. உன்னோட கல்யாண சேலை கொண்டாந்துருக்கியான்னு கேட்டா ஆமான்னு சொன்னவன்ன அதைக்கட்டிக்க முக்கியமான ஒரு ஃப்ங்கசனுக்குத்தான் போறோம்னா

இப்பவாவது சொல்லித்தொலையேண்டி சஸ்பென்ஸ் தாங்கலன்னா. அதெல்லாம் சொல்ல முடியாது காருல ஏறுன்னு சொல்லிக்கூப்புட்டுப்போனா. ஒரு மணிநேரப்பயணத்துக்கு அப்புறம் ஒரு எடம் என்னமோ லேப் நு போட்டிருந்துச்சு. அதுக்குள்ள கூட்டிட்டுபோய் சில செக்கப் எல்லாம் அவளைப்பண்ணுனாங்க.

இப்ப மக அம்மாகிட்ட சொன்னா. அம்மா இந்த கிளவுஸ மாட்டிக்கன்னு குடுத்து ஒரு ஜோடி கிளவுஸ் குடுத்தா. அப்புறம் ஒரு பெரிய ஹால் மாதிரி எடம் அதுக்குள்ள கூட்டிட்டுப்போனா உள்ளாற என்னான்னமோ இருந்துச்சு.

இப்ப நான் குடுக்குற இந்த மாஸ்க் போட்டுக் கன்னா. அப்ப அவகூட நாளைஞ்சு பேர் இருந்தாங்க.பாத்தா ஏதோ விஞ்ஞானிக மாதிரி இருந்தாங்க. அவகுடுத்த மாஸ்க் ஹெல்மெட் மாதிரி இருந்துச்சு அதைப்போட்டவன்ன ஒரே இருட்டா இருந்துச்சு. அம்மா மனச திடப் படுத்திக்க இனிமே நாங்க பேசுறது எதுவும் உனக்குக்கேக்காது நீ ஒரு புது உலகத்துக்குள்ள போகப்போற. அப்புறம் உன் அனுபவத்தைச் சொல்லும்மா ஆல்தி பெஸ்ட்ன்னு சொன்னா

கொஞ்சநேரத்துல கொஞ்சம் கொஞ்சமா வெளிச்சம் வர ஆரம்பிச்சது. அவளுக்கு முன்னாடி அழகான பச்சைப்பசேல்னு ஒரு தோட்டம் மெல்லத் தெரிய ஆரம்பிச்சது. அதுல அழகான மலர்கள் பூத்துக்குலுங்கின. ப்ழங்கள் எல்லாம்காய்ச்சிகிடந்தன. பாக்கவே அழ்கா இருந்துச்சு. சிலுசிலுன்னு காத்தடிச்சி அதுல அந்த பூக்களின்

வாசம் அவளை வருட ஆரம்பிச்சது. என்னா ஒரு அனுபவம் அவ மனசு லேசாச்சு.

அப்ப அந்தத்தோட்டத்துல ரெண்டு முயல் குட்டிக ஓடிவந்து வெளையாண்டுச்சு. அதுல ஒன்னு இவகிட்ட வந்து நின்னு லேசா சத்தம் போட்டுச்சு. திடீருன்னு அது பேச ஆரம்பிச்சது அம்மா நல்லாருக்கீங்களான்னு. அது அவளோட மககுரல் போல இருந்துச்சு. அதை லேசாத்தொட்டுப்பாத்தா. மெத்து மெத்துன்னு இருந்துச்சு. அப்புடியே அதை கையில் எடுத்துக்கிட்டா அது தாவி தப்பிச்சி ஓடிச்சி

அதுக்குப்பின்னாடி இவ போனா. அங்க இருந்த ஆப்பிள் பழங்களை தொட்டுப்பாத்தா. அதைப்பிடுங்கி தடவிப்பாத்தா. நல்லா இருந்துச்சு. அப்புடியே ஒவ்வொன்னா தொட்டுப்பாத்தா. பூக்களோட வாசம் ஆளைத்தூக்குச்சு.

கொஞ்சநேரத்துல ஒரு சிங்கத்தோட கர்ஜனை கேட்டுச்சு. இவ நடுங்கிப்போயிட்டா. பக்கத்துல இருந்த பாறைமேல ஒரு சிங்கம் நின்னுக்கிட்டு இவளையே பாத்துக்கிட்டு இருந்துச்சு. இவளுக்கு பயம் அதிகமாயி நடுங்க ஆரம்பிச்சா. தீடீருன்னு அது மேல இருந்து இவ மேல பாய இவளுக்கு ரத்தம் உச்சந்தலையில ஏறி கீழ விழுந்தா. அது இவ மேல பாயும் போதுதான் அது நடந்தது.

யாரோ ஒருத்தர் அந்தசிங்கத்துக்கு குறுக்க வந்து தடுத்து அதுகூட சண்டைபோட்டார். கிட்டத்தட்ட அடிமைப்பெண் எம்.ஜி.ஆர் மாதிரி சிங்கத்துக்கூட கட்டிப்பொறண்டு சணடை போட்டார். அவர் யாருன்னு தெரியல, கொஞ்சநேரத்துல அவர் சிங்கத்தோட வாயக்கிழிக்கப்போனபோது சிங்கம் திமிறிக்கிட்டு ஓடிடுச்சு. இப்ப அவர் இவ பக்கம் திரும்பினார்.. பயந்துட்டியான்னு சொல்லிக்கிட்டே

இவளோட அதிர்ச்சி உச்சத்துக்குப்போச்சு. அது வேற யாருமில்ல. சாட்சாத் அவளோட இறந்து போன கணவன் தான். அவரப்பாத்ததும் இவளால தாங்கமுடியல கடகடன்னு கண்ணுல தண்ணி கொட்ட நீங்களான்னு கேட்டா. ஆமா நான் தான் ஒங்களை ஒரு தடவ பாத்துட்டு வரசொல்லி அனுப்பிச்சிருக்காங்கன்னு சொன்னவன்ன இவளுக்கு அழுக இன்னும் அதிகமாயிடுச்சு

நெசமா இது உண்மையா ஏமாத்து வேலை யான்னு யோசிக்கும் போது அவர் அவ பக்கத்துல வந்து வேன்னா தொட்டுப்பாருன்னு சொன்னார். இவ தயங்கித்தயங்கி தொட்ட வன்ன அவரோட விரல்கள் இவளோட விரல்களோட கோர்த்துக்கிச்சி இப்ப நம்புறீயான்னுகேட்டார்..

இவளால அந்த ஆனந்த அதிச்சியத்தாங்கிக்க முடியல. கரகரன்னு தண்ணி கண்ணுல ஊத்த ஏங்க எங்களை அப்புடிஅனாதையா விட்டுட்டுப்போய்ட்டீங்கன்னு அழுதா. அப்ப அதான் வந்துருக்கேன்ல. அன்னிக்கி தூக்கிட்டுப்போய்ட்டாங்க. இப்ப அனுப்பிச் சிருக்காங்க வந்துருக்கேன்னார்

அப்ப அவர் கேட்டார் நீ சுகர் பிரஸர் மாத்திரை யெல்லாம் ஒழுங்கா சாப்பு டுறீயான்னு கேட்டார். சாப்புடுறேனுங்க. நீங்க இல்லாத ஒலகத்துல இருக்க எனக்குப் பிடிக்கல. இருந்தாலும் பிள்ளைகளுக்காக இருக்குறேன். அவங்களுக்குப்பாவம் யாரு இருக்கா நானவது இருக்கனுமில்லயான்னா.

அதுக்கு அவர் சொன்னார் பெரியமக தான் உன்ன சந்திக்க ஏற்பாடுபண்ணுனா. ரெண்டாவதுமகளும் மகனும் நல்லாருக் காங்களான்னு கேட்டார்

இவ மேலும் கண்ணீர்வடிய ஆமா நல்லாருக்காங்க. அவ இஞ்சினியரிங் முடிச்சி வேலைக்கிப்போறா. மகன் உங்க ஆசைப்படி டாக்டர் படிப்பு நாலவது வருசம் படிக்கிறான் என்னோட சகதிக்கி ஒழைச்சி மகளோட ஒதவினால நாங்க நின்னுட்டோம்ங்கனு சொல்லி அழுதா.

பேசாம இப்ப நானும் உங்க கூட வந்துருட் டான்னா. அது முடியாது. அததுக்கு நேரமிருக்கு. இன்னும் பிள்ளைகளுக்கு கல்யாணம் காட்சிபாக்கனும் அதெல்லாம் நீதான இருந்து செய்யனும் இருந்து செஞ்சிட்டு வா. உனக்காக நான் காத்திருக்கிறேன்னு சொன்னப்ப அவரோட மடில விழுந்து அழுதா

இப்ப அவர் சொன்னாரு. சரி நேரமாச்சு நான் போகனும் வரட்டுமான்னு கண்ணுல தண்ணீர் வழியக்கேட்டார். இதுக்கு நான் என்னபதில் சொல்ல அன்னிக்கி சொல்லாமப்போய்ட்டீங்க இப்ப போகவான்னு கேக்குறீங்க. நான் என்ன சொல்ல இந்த நிமிசமே செத்துறலாம்போல இருக்கு என்ன விட்டுப்போகாதீங்கன்னு அழுதா

அவர் இல்ல டைம் ஆயிடுச்சு.

இன்னொரு நாளைக்கி வாறேன் பாக்கலாம்னு சொல்லிட்டு அவளோடை கைய விடமனசில்லாம

விட்டுக்கிட்டே அந்தத்தோட்டத்துக்குள்ள போனாரு. இவ குலுங்கிக்குலுங்கி அழுதா. கண்ணீர் வெள்ளம் வர பாத்தா கைய ஆட்டிக்கிட்டே அவர் போனார். இவகைய ஆட்ட மனிசில்லாம கண்ணீரோட நின்னா...

அப்படியே ஒளி மங்க ஆரம்பிச்சது..

கொஞ்ச நேரத்துல இருள் சூழ்ந்து எல்லாச் சத்தமும் நின்னுபோச்சு. அப்ப யாரோ தோள்ல தட்ட நினைவுக்கு வந்து தலையத் தூக்குனா. அப்ப அவளோட மக வந்து அந்த மாஸ்க்கக் கழட்டுனா, அப்பப்பாத்தா அங்க இருந்த எல்லோரும் கண்களை தொடச்சிக்கிட்டு இருந்தாங்க..

இவளுக்கு ஒன்னும் புரியல. அப்ப அவளோட மகள் வந்து ஆதரவா கையப்புடிச்சிக் கூட்டிட்டுப்போய் உட்காரவைச்சா. அம்மா எப்புடி இருந்துச்சு அப்பாவப் பாத்தீங்களா பேசுனீங்களா என்ன சொன்னாருன்னு கண்கலங்கிக்கேட்டா.

அதுக்கு அவளோட பதில் அழுகையா இருந்துச்சு. மறுபடியும் அந்த பிரிவு வலிய அவளால தாங்கமுடியல மகளோட மடில விழுந்து குலுங்கி அழுதா.

அப்ப மக சொன்னா நீங்க பாத்தது பேசுனது எல்லாம் விஞ்ஞானதோட வளர்ச்சி.இத வெர்ச்சுவல் ரியாலிட்டின்ற மற்றும் ஆர்டிஃபிசியல் இண்டெலிஜென்ஸ் *Artificial Intelligence* விஞ்ஞானதுல செய்ய முடியுமுன்னு தெரிஞ்சப்ப எனக்கு அப்பாவ உங்களுக்குக் காமிக்கனும்னு தோணிச்சு. அதுக்குத்தான் அந்த போட்டோ வீடியோ எல்லாத்தையும் எடுத்துட்டு வரச்சொன்னேன். இங்கதான் நான் வேலைபாக்குறேன்.

அந்த அற்புதமான விசயத்துனால நீங்க அப்பாவப்பாத்துப்பேசுற ஒரு சந்தோசத்தத் தறனும்னு நெனச்சித்தான் வரச்சொன்னேன் அமெரிக்காவுக்கு. ஒரு மகள் தன் தாய்க்கு செய்யக்கூடிய கடமையாப்பாத்தேன்.... இனிமே இதுமாதிரி யார்வேணுமானாலும் இறந்துபோன அல்லது வேற எடத்துல இருக்குறவங்கள இதுமாதிரி பாக்கலாம்.

அடுத்த தடவ யாரைப்பாக்க விரும்புறீங்க அம்மான்னு கேட்டா.அப்ப அவ சொன்னா என்னோட அப்பாவன்னு சொல்லும்போது மீண்டும் அவள் கண்கள் கண்ணீரால் நனைஞ்சிச்சு. அப்ப மகள் சொன்னா ஆமாஉங்க அப்பாவும் இப்ப இல்லைலன்னா. அதநெனச்சதும் அம்மா கண்ணுகலங்கிருச்சு

இறந்துபோனஅப்பாவ பாக்க ஆசைப்படாத பொண்ணும் இருக்காங்களா என்னனு சொல்லிக் கட்டிப்புடிச்சிக்கிட்டா அம்மாவ. அப்ப ரெண்டுபேர் கண்களும் கலங்குச்சி அவங்க அவங்க அப்பாக்களை நெனச்சி...

**● ரோஷான் ஏ.ஜிப்ரி, இலங்கை**

## எனக்கு மொழியாகிய உனது மௌனம்..!

எனது
வாசிப்பனுபவத்தில்
மிகப்பெரும் சவாலுக்குரியது
நீ பயிற்றுவித்த
நீள் தொடரான மௌனமொழிதான்

நயனங்களில் பிரவாகிக்கும்
ஒளியில் வசிக்கின்றேன்
நீ தேர்ந்த மொழி அப்படி
அழகியல் சார்ந்தது

மிதமான காலநிலையில்
மனம் ரசிக்கும் சங்கீதம்போல்
சிலிர்ப்புமிகு நொடிகளை
நான் கடந்து செல்கிறேன்
அல்லது..., என்னை
கடத்தி செல்கிறாய்

சேமிக்க இயலாமல் வெறுமையாயிருக்கும்
ஒரு புல்லாங்குழலாக
எனது பொழுதுகளாயினும்
இசைகவிய குவியும்
மகிழ்ச்சி என்னுள் பூக்கின்றன

பேசாமல் கடந்தாலும்
புன்னகைத்த பூரிப்புடன்
பார்வைப் பூத்தூவி
அழகுமிகு அதிகாலையை ஞாபகமூட்டி
நகர்ந்தபடி
என் உயிரை வாசிக்கும் பேரன்பே
நீ இன்னும் அப்படியே இரு..
வாழ்வு முழுக்க வசதியானது
இவ்வாய்ப்பு

எனக்கு பிடித்த மிகவும் அழகானது உனது
மொழியும்
அதை மொழியும் விழியும்
இவ்வுலகில் இன்னும்
கலையானதும் அதிக விலையானதும்
அழகானதும்தான்!



● ச. இராஜ்குமார்

## என்னை தேடும் நான்...

தேடிக்கொண்டிருக்கிறேன்
எப்போது நான் நானாக இருந்தேனென்பதை...
அன்பால் விளைந்த
பல துரோகங்கள்
நடந்தேறிய பிறகு
கண்ணீர்த்துளிகளில் கரைந்து
கொண்டிருந்தேன்..

இனி அத்தவறை
செய்ய கூடாதென்று
உறுதியாக முடிவெத்தபோது
நான் நானாக இருந்தேனா..?
எங்கள் குடும்பம்
ஏழையென்று
பலர் கேளி செய்தபோது
பள்ளி படிப்பை
பாதியில் நிறுத்திவிட்டு
குடும்பத்திற்காக
உழைக்க வெளியூர் சென்றேனே
அப்போது நான் நானாக இருந்தேனா..?
திடீரென்று அப்பாவின் மரணம் நிகழ்ந்த
போது இப்போது தானே வாழவே
துவங்கினோம்
அதற்க்குள் இப்படியா
கடனிலிருந்து மீள இனி எத்தனை ஆண்டுகள்
உளைக்க வேண்டுமோ
என்று கதறி அழுத போது
நான் நானாக இருந்தேனா..?

உளைக்க தெரிந்தவனுக்கு பிழைக்க
தெரியவில்லை என்று சொல்வார்கள்
உண்மை தான்..
காதல் என்றால்
பரிபூரணமான அன்பு தானே
அதை உணராத காதலி
நீ வேண்டாமென்று
உதறி தள்ளிய போதும்
தற்கொலைக்கு என்னை நானே தள்ளிய போதும்
காதல் மட்டும்
தான் வாழ்க்கையா
வாழ இன்னும் நிறைய
இருக்கிறதென்று கவிதைகள்
என்னை பக்குவப்படுத்திய போது
நான் நானாக இருந்தேனா..?
தேடிக்கொண்டிருக்கிறேன்..!
அப்போதும் சரி இப்போதும் சரி
எப்போதும்
எவருக்கும் துன்பம் விளைவிக்காதவாறு
நான் நானாக இருப்பதாலே
நான் இன்னும் உயிரோடு
வாழ்ந்துகொண்டிருக்கிறேன்...
மனசாட்சி....!!



● மூபின் சாதிகா

ஓர் ஓவியன் படம் வரைவதைப் பார்த்து ஒரு சிறுமி தன்னை வரையுமாறு கேட்டாள். அவனும் அவளை வரைந்தான். மேலும் பல ஓவியங்களை வரையக் கேட்டாள். அவனும் பல ஓவியங்களை வரைந்தான். அதை ஒரு கண்காட்சியாக வைத்தான். அந்தப் படங்களைப் பார்த்த பலரும் பாராட்டினர். சிலர் அந்த ஓவியங்களை வாங்கிச் சென்றனர். அந்தச் சிறுமி அதைப் பார்த்துத் தன் ஓவியங்களை யாருக்கும் தரக்கூடாது என்று ஓவியனிடம் சொன்னாள். ஓவியம் விற்காவிட்டால் தனக்கு வருமானம் கிடைக்காது என்றான் அவன். அதைக் கேட்டுப் பெரிதும் வருந்திவிட்டு தன் வீட்டுக்குப் போய்விட்டாள் அந்தச் சிறுமி. அடுத்த நாள் சிறுமியின் ஓவியத்தை வாங்கிச் சென்றவர்கள் அந்த ஓவியத்திலிருந்த அந்தச் சிறுமி காணாமல் போய்விட்டதாகவும் தங்களுக்கு அந்தச் சிறுமி இருக்கும் படம் வேண்டும் என்றும் வந்து கேட்டார்கள். அவனும் வேறு வழியில்லாமல் அந்தச் சிறுமியின் மற்ற படங்களை எடுத்துக் கொடுத்தான். அவனால் அதை நம்பவே முடியவில்லை. எப்படி அந்தச் சிறுமி ஓவியங்களிலிருந்து காணாமல் போயிருப்பாள் என எண்ணித் துயருற்றான். அந்த மாயச் சிறுமியால் தான் பெரிதும் நஷ்டத்தை அடைந்துவிட்டதாக எண்ணி புலம்பினான். வேறு ஓவியங்களை வரைந்து விற்கலாம் என எண்ணி கித்தானை எடுத்து விரித்தான். அதில் கை வைத்தவுடன் சிறுமியின் ஓவியத்தைத்தான் வரைந்தான். அவனால் அவனைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. வேறு நாட்டுக்குச் சென்று அங்கு அந்த ஓவியங்களைக் கண்காட்சிக்கு வைத்து விற்றுவிடலாம் எனக் கிளம்பிப் போனான். அங்கும் அதே போல் அந்த ஓவியங்களை வாங்கியவர்கள் அடுத்த நாள் வந்து ஓவியங்களிலிருந்து சிறுமியின் உருவம் காணாமல் போய்விட்டது எனப் புகார் கூறினார்கள். அந்த ஓவியங்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அவன் செய்வதறியாது குமைந்து போனான். பல ஓவியங்களை வரைந்தான். எல்லாமே சிறுமியின் ஓவியங்களாகவே இருந்தன. மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெற முயன்றான். உளவியலாளர்களிடம் சென்று தன் சிக்கலைச் சொன்னான். யாராலும் அவனுக்குத் தீர்வு தர முடியவில்லை. மிகவும் வறுமை நிலையை அடைந்தான். சில ஆண்டுகள் கடந்த பின் ஓர் இளம் பெண் அவன் வீட்டுக்கு வந்து அவன் வரைந்த ஓவியங்கள் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டாள். இந்த ஓவியங்களை வாங்கி வீட்டுக்கு எடுத்துப் போனால் அவற்றில் அந்தச் சிறுமியின் உருவம் மறைந்து போகும் எனச் சொன்னான். அவளோ அந்தச் சிறுமியின் உருவம் இனி மறையாது, ஏனெனில் அந்தச் சிறுமி தான்தான் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.

# கவிதையும் கருத்தும்.
# கவிதையை பாதியிலேயே நிறுத்திய ஏ.நஸ்புல்லாஹ் அவர்களின் "நிறங்கள்"

● திருஞானசம்பந்தன் லலிதகோப, திருகோணமலை.

*நிறங்கள்*
*என் மீதான நிறங்களை*
*ஒரு பறவை எடுத்து சென்று*
*நான் அற்ற அறையில் வைத்திருக்கிறது*
*அல்லது பெருங்காடொன்றில்*
*மறைத்து வைத்திருக்கிறது*
*அதனால்*
*வர்ணங்களால் நான் கண்ட கனவுகளை*
*தொடங்க முடியாமல் அப்படியே வைத்திருக்கிறேன்*
*நம்பிக்கை தரக்கூடிய அந்நிறங்கள்*
*தவறிய பொம்மையென*
*பல பொழுதுகள் அங்கேயே இருக்கின்றன*
*நிறங்களற்றதால்*
*நான் காகத்தை போல*
*கறுப்பாக இருக்கிறேன்*
*சில நேரம் மொழி தெரியாத*
*சிறு குழந்தையைப்போல*
*அழவும் முற்படுகிறேன்*
*துயர் முற்றியதன்*
*மூன்றாம் நிலையாக இருக்ககூடுமென*
*எனதறை முழுக்க பேச்சு*
*ஓ....*
*பறவையே வானத்திற்கு*
*அப்பாலான வெளியில்*
*என் நிறங்களை வைத்திருந்தாலும்*
*சோடி சோடியாய்*
*என் நகரத்திற்கு அந்நிறங்கள்*
*ஒருநாள் பறந்து வரும்*
*பிரிந்த உருவங்கள் கிடைத்து*
*நான் மறுபடியும் நிறங்களுடைய*
*மனிதனாய் மிகத்தாமதமாயினும்*
*என் உரையாடலை தொடங்குவேன்.*

- *ஏ.நஸ்புல்லாஹ்.*

மனிதர்கள் யாவரும் சமம் என கூறப்பட்டாலும் அவர்கள் பால்,இன,மத,நிற பேதங்களினாலேயே அறியப்படுகின்றனர்.இந்த கவிதையில் வரும் கவிதையின் குரல் கூட நிறமிழந்த ஒருவனின் குரலாகவே அறியப்படுகிறது.

நிறங்கள் வெறுமனே காட்சிப்பொருட்கள் என்பதையும் கடந்து அவை குறியீடுகளாக அமைந்து மொழிப்பரிவர்த்தனையை கூட நிகழ்த்துகின்றன.ஆனால் அவைகள் குறித்த பொருளை மட்டுமன்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் பல வகையான சமிக்ஞைகளை உணர்த்துகின்றன.உதாரணமாக சிவப்பு என்ற வர்ணம் பெருந்தெருக்களில் நில் என்பதாகவும் சிக்கலான நிலைகளில் அபாயம் என்பதையும் குறிக்கின்றது.

//என் மீதான நிறங்களை
ஒரு பறவை எடுத்து சென்று
நான் அற்ற அறையில்
வைத்திருக்கிறது
அல்லது பெருங்காட்டொன்றில்
மறைத்து வைத்திருக்கிறது//

பறவைகள் நிறங்களால் அறியப்படுகையில் யதார்த்த வாழ்வில் மனிதர்களே பறவைகளின் வர்ணங்களை பறிப்பது வழக்கம். ஆனால் கவிதையில் வரும் கவிதைசொல்லி தனது வர்ணங்கள் பறவையினால் களவாடிச்செல்லப்பட்டதாக முறையிடுகிறார்.இது புனையப்பட்ட பறவை.எனவேதான் மனிதனிடமிருந்து நிறங்களை பறித்து சென்றுள்ளது.இங்கே பறவை அதிகாரத்தை நிலைநிறுத்துகிறது அல்லது வன்முறையினை நிகழ்த்துகிறது.

வர்ணங்களை ஒளித்து வைத்திருக்கும் இடம் தொடர்பில் மனிதனுக்கு நிச்சயமாக தெரியாது.இரண்டு இடங்களை பறவை ஊகமாக கூறுகிறது. நானற்ற அறை என்பதிலிருந்து அது சிலவேளைகளில் பறவை வசிக்கும் இடமாக இருக்கலாம் என்ற ஊகம் கூட எழுகிறது. ஆனால் அதன் பரப்பு குறுகியது.பறவையற்ற நேரங்களில் அதனை மீண்டும் அடையலாம். ஆனால் காடு என்கிறபோது பரந்ததும் அடர்ந்ததுமான பரப்பில் வர்ணங்களை தேடி எடுப்பதற்கான நிகழ்தகவு இழிநிலையிலேயே கவிதையில் பேணப்படுகிறது.

ஒரே வாக்கியத்தில் எதிரெதிரான நிலவியல் பண்புகளை நிலைநிறுத்துவதனூடே கவிதையில் என்ன நிகழும்?மறைக்கப்பட்ட வர்ணங்களை தேடுகையில் ஏதாவது ஒன்றில் கிட்டினால் மற்றையது வலுவிழந்து விடுகிறது.இவ்வாறு நிலவியல் கூறொன்றை பெறுமதியற்றதாக்கும் நுட்பம் கவிதையில் இழையோடுகிறது.

பறவை நிறங்களை ஒளித்து வைத்திருக்கும் இடம் தொடர்பில் பறவையின் பக்கமாக பார்க்கையில் அது அறையை மூடியுள்ளதா அல்லது திறந்து வைத்திருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. மூடி வைத்திருப்பின் வர்ணங்களை அடிமைப்படுத்துதல் தெளிவாகிறது. ஆனால் காட்டில் விடுகையில் சுதந்திரம் என்பது கிட்டுகிறது. ஆனால் நிறங்களின் பாதுகாப்பு குறித்து அச்சம் எழுகிறது. ஏனெனில் வேறு பறவைகள் அல்லது மிருகங்கள் வர்ணங்களை கையாடலாம் அல்லது அவை வேட்டையாடப்படலாவ

ஆங்கில வழக்கில் the colours of life என்ற தொடரொன்று புழக்கத்தில் இருக்கிறது. வாழ்வுக்கு வர்ணங்களை தருவது எதுவாகவும் இருக்கலாம். செல்வம்,மக்கள், மனைவி,கல்வி என பல்வேறு அர்த்த சாத்தியங்கள் இங்குண்டு. இதில் எதனை களவாடியது என்ற கேள்வியும் எழுகிறது. மறுபுறத்தே பறவையென கூறப்படுவது பறவையா என்றும் கேள்வியெழுகிறது. ஏனெனில் பெண்களை பறவைகள் என்று அழைப்பதுமுண்டு.இரவில் அதிகநேரம் விழித்திருப்போரை இரவுப்பறவையென அடைமொழியால் கூறுவர்.இவ்வாறு இந்த கவிதையின் ஆரம்பமே பல்வேறு சாத்தியங்களை வாசகர் முன் விரிக்கிறது.

//அதனால் வர்ணங்களால்

நான் கண்ட கனவுகளை தொடங்க முடியாமல் அப்படியே வைத்திருக்கிறேன்//

வர்ணக்கனவுகள் என்பது நேசத்தில் முகிழ்ந்திருக்கையில் காண்பது.இந்த நிலையில் முன்னைய பந்தியில் பறவை என்றிருப்பதை தொடர்புபடுத்தி பார்க்கையில் இங்கு களவாடப்பட்டிருப்பது காதலா என்ற ஊகமும் நேரிடுகிறது.

*Costly dreams* என புழக்கத்தில் இருக்கும் கனவுகள் கூட வர்ணக்கனவுகளாயே இருக்கும். இந்த பெறுமதியான கனவுகள் எது குறித்தும் எழலாம். சாதாரணமாக ஒரு இலக்கை அடைய நினைக்கையில் அதனை *costly dream* எனவும் கூறுவர்.இந்த நிலையில் வைத்து பார்க்கையில் யதார்த்தம் ஒன்று இந்த கவிதையில் குறுக்கிடுவதை காணலாம்.

பறவை வர்ணங்களை திருடியதால் கனவுகளை தொடங்க முடியாது இருப்பதாக கூறும் கவிதைசொல்லியிடம் கறுப்பு வெள்ளையில் கனவு காண முடியாதா என கேட்கலாம். ஆனால் கவிதைசொல்லி அதற்கான சாத்தியங்களை ஒதுக்கி விடும் ஒருவராகவே இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளார்.

//நம்பிக்கை தரக்கூடிய அந்நிறங்கள்
தவறிய பொம்மையென
பல பொழுதுகள் அங்கேயே இருக்கின்றன//

நிறங்களை விரும்பும் இந்த கவிதைசொல்லி அவற்றை நம்பிக்கையின் குறியீடாக கூறுவது பொருத்தமானதே.ஆனால் தவறிய பொம்மையென கூறுவது முரணாகிறது.ஏனெனில் தவறியதால் அல்லது கையாடப்பட்டதால் அது தவறிய பொம்மை. ஆனால் இருந்திருந்தால் அது வெறும் பொம்மை. இதிலிருந்து புலனாவது இவர் நிறங்களை பொம்மையாக பாவிக்கிறார் என்பதே.இன்னொருவரின் கட்டளையின் பிரகாரம் நடப்பவர்களை பொம்மைகள் என்றழைப்பது வழமை.

அஃறிணைகளின் மீதான அதிகாரத்தை நிலைநிறுத்தும் குரலென இந்த கவிதையின் குரல் இப்போது எஞ்சுகிறது.இதுவரைக்கும் இன்னோர் அஃறிணையை அதிகாரமிக்க ஒன்றாக கட்டியெழுப்பிய கவிதைசொல்லியின் சாயம் வெளுத்து விடுகிறது.இந்த நிலையில் பறவையின் பக்கம் மேலோங்கி கவிதைசொல்லி சற்றே தாழ்வதை காணலாம்.

தர்க்க ரீதியாக யோசிக்கையில் இவருக்கு வர்ணங்களை கையாள தெரியாமை அல்லது அடிமைப்படுத்தியதன் நிமித்தமாக பறவை நிறங்களை எடுத்து சென்றிருக்கலாமோ என யோசிக்க நேரிடுகிறது.

//நிறங்களற்றதால்
நான் காகத்தை போல
கறுப்பாக இருக்கிறேன்//

இப்போது முற்றும் முழுதாக கவிதைசொல்லியின் சாயம் வெளுத்து விடுகிறது. கறுப்பினை ஒரு நிறமாக ஏற்காத அதிகாரத்தின் குரலே கவிதைசொல்லியின் குரல் என முடிவே செய்து விடலாம். அடுத்தபடியாக தன்னை காகத்துக்கு ஒப்பிடுவதில் கூட பேதம் காட்டப்படுகிறது. நிறங்களை திருடிய பறவைகளின் இனங்களில் காகம் இல்லையா என்ற கேள்வி எழும்பும் அதே நேரத்தில் திருடிய பறவை காகம் இல்லையென்பதும் புலனாகிறது.

எவ்வாறாயினும் கறுப்பை நிறமாக ஏற்காத இந்த கவிதைசொல்லியின் அதிகாரம் கவிதை வரிகளினூடே கட்டவிழ்க்கப்படுகிறது.இதற்கு அப்பால் இந்த கவிதை நகர்வதற்கான தர்க்க நியாயங்களை தேட முடியாதிருக்கிறது.கவிதை இத்துடன் முடிந்து விடுவதாக கூறலாம். இந்த அதிகாரத்தின் குரல் குழந்தைபோல அழுவதாக கூறினாலும் அது முதலைக்கண்ணீர் என்றும் கூறிவிடலாம்.

கவிஞரின் தேர்ந்த கவித்துவம் இங்கு வெளிப்படுத்தப்படுகிறது.கவிதைசொல்லியின் குரலை அனுதாபம் மிக்கதாயும் பறவையை அதிகாரத்தின் பிரதிநிதியாகவும் அறிமுகம் செய்து பின்னர் நிகழும் கட்டவிழ்ப்பில் தலைகீழான மாற்றம் நிகழ்கிறது. இந்த கட்டவிழ்ப்பின் பின்னால் வரும் வரிகள் போலியானவை அல்லது புறக்கணித்து விடக்கூடியவை.இது ஒரு உத்தி.

அற்புதமான உத்திகளை கையாளும் கவிதைசொல்லியாக நஸ்புல்லாஹ் அவர்கள் உயர்ந்து விடுகிறார்.

● குமரி உத்ரா

# கண்டா வரச் சொல்லுங்க...!!



*கிழக்கின் கதிரோடு*
*பச்சையை பரிச்சயமாக்கி*
*கீ..கீ என கத்தும்*
*கிளிகளை காணவில்லை..!!*

*நெடும் மரங்களின்*
*மறைவிலிருந்து*
*துயிலெழுப்ப கூவும்*
*குயில்களையும் காணவில்லை..!!*

*விருந்தினர்களை வீடழைக்க*
*கா..கா.. என கரையும்*
*காகங்களை காணவில்லை..!!*

*தக தக வென மின்னி*
*தம்பிகள் போல் தாயமாடும்*
*தும்பிகளை காணவில்லை..!!*

*வண்ணங்கள் குழைத்து கண்ணுக்கு குளிர்ச்சி தரும்*
*வண்ணத்துப்பூச்சிகளை காணவில்லை..!!*

*மரங்களுக்கு மருத்துவம் பார்த்து*
*மனங் கொத்திப் போன*
*மரங்கொத்திகளை காணவில்லை...!!*

*கண்ணுக்கு மை எழுதி*
*சர.. சர.. என பறக்கும் மைனாக்களை*
*காணவில்லை..!!*

*சின்ன, சின்ன சிறகசைத்து*
*தத்தி தத்தி ஓடும்*
*சிட்டில்களை*
*காணவில்லை..,!!*

*ஓலைகளின் மறைவில்*
*ஒளிந்து விளையாடும் ஒரு கூட்டம் அணில்*
*பிள்ளைகளை காணவில்லை..!!*

*உயரமான மனிதர்களின் உள்ளங்கள் சிறிதானதால்..*
*இடம் மாறி போனதா...??*
*உயிர் இழந்து போனதா...??*

*கண்டா...*
*வரச் சொல்லுங்க.!!!*

## ● இரா. மதிராஜ்

காற்றின் திசைகளில்
வாசத்தை அடவுகட்டும்
பூக்கள் மலர்ந்த காலையில்
உன்னில் தடதடக்கும் இதயத்துடிப்பு
உனக்கானதல்ல என
நீ உணர்ந்தபொழுதில்

ஒரே ஒரு முறையேனும்
உன் சுயத்தை சொல்லிவிட
விட சமயம் பார்க்கிறாய்


உன் குறு நகையில்
ஒளிந்திருக்கும் ஸ்தூலத்தையே பார்த்துக்
கொண்டிருக்கிறேன்

கோலத்தில் தொடங்கி
மருதாணி வரை
யாவற்றையும்
தவமாக்குகிறாய்

எப்போதும் ருசிகளை
பரிமாறும் நீ
விரதமேற் கொள்ளவதை
வேடிக்கை பார்க்கிறது
அந்த பொம்மை

எல்லாக் கூடைகளையும்
பூக்களால் நிரப்பும்
உனது விரல்களின்
ஸ்பரிசத்தில் ஸ்படிகமாகிறேன்

*மரம் சொல்லும் அறம்*
*மரத்திற்கு புத்தனும்,*
*பித்தனும்*
*ஒன்று தான்,*
*இருவருக்குமே*
*ஒரே மாதிரியான*
*நிழலைத் தருகிறது!*
*மரம்*
*இனப் பாடுபாடுப்*
*பார்ப்பதிலை,*
*எந்த உயிரினம்*
*வந்தாலும்*
*அடைக்கலம்*
*கொடுக்கிறது!*
*மரம் வசந்தக் காலம்*
*மட்டுமல்ல*
*கோடைக் காலத்திலும்*
*நிழலைக் கொடுக்கிறது!*
*மரம் யாருக்கும்*
*இடைஞ்சல்*
*தருவதில்லை*
*உதிந்த சருகையும்*
*உரமாக்கிறது!*
*மரம் கிழிருந்து*
*நீரெடுத்து*
*மேலிருந்துக்*
*காய்க்கிறது!*
*மரம் தன்னை*
*வெட்டினவரையும்*
*வாழ வைக்கிறது!*
*மரம் கிளைகளை*
*வெளியேப் பரப்பினாலும்*
*வேர்களை தன்னுள்*
*வைத்திருக்கிறது!*
*மரம் தன்னை சுற்றி*
*புழுதிக் காற்று*
*வீசினாலும்*
*மற்றவர்களுக்கு*
*உயிர் காற்றை*
*கொடுக்க*
*மற(று)ப்பதிலை!*




# விலகி போகாத நினைவுகள்

## புத்தக விமர்சனம்

**● மகா மாயா(ஜொசெப்பின் பாபா)**

*மத நிந்தனை செய்ததாகக் கூறி 2010 ல் ஒரு ஜூலை மாதம் மத வெறியர்களால் கை துண்டிக்கப்பட்ட கேரளாவை சேர்ந்த கல்லூரி ஆசிரியர் டி.ஜே.ஜோசப்பின் சுயசரிதை ஆகும் 'விலகி போகாத நினைவுகள்'(அற்று போகாத்த ஓர்மகள்)! இப்புத்தகம் 2021 ஆம் ஆண்டின் கேரள சாகித்ய அகாடமி விருதை பெற்றது. ஜோசப்பின் 'அற்று போகாத்த ஓர்மகள், மதத் தீவிரவாதத்தைப் பற்றிய சிலிர்க்க வைக்கும் உண்மை சம்பவங்களின் தொகுப்பு மட்டுமல்ல, ஒரு தனி நபரின் வாழ்க்கையில் நடந்த அதிர்ச்சிகரமான சம்பவங்களும் ஒன்றுக்கு பின் ஒன்றாக சந்தித்த சோதனைகளும் அதை தொடர்ந்த வலிகளும் இழப்புகளும் ஆகும்.*

*மலையாளப் பாடம் தேர்வுத் தாளில் கேள்வி அமைத்ததில் (internal exam) ஒரு கேள்வியில் இருந்த ஒரு வார்த்தைக்காக குற்றவாளியாக மாற்றப்பட்டு ஜெயிலுக்கு சென்றவர், பிற்பாடு கை இழந்து, வேலை இழந்து கடைசியில் தனது மனைவியையும் இழந்தார்.*

*உயிருக்கு பயந்து வீட்டுக்குள் அடைந்து கிடக்கும் பேராசிரியர், ஒரு நாள், தனது சுகவீனமான தாயார் மற்றும் கிறிஸ்தவ சபை பெண் துறைவியான தனது சகோதரியுடன் ஞாயிறு காலை நேர ஆராதனைக்கு போய் விட்டு தனது காரில் திரும்புகிறார். சாலையின் ஒரு வளைவில் வைத்து, பேராசிரியரின்*

காரை இன்னொரு வாகனத்தை வைத்து இடை மறித்து, தாய் மற்றும் சகோதரியின் முன் வைத்து, கைக் கோடாலி மற்றும் மூன்று கத்திகளால் கை மொளி, கணங்கால் வெட்டப்பட்டு தெருவில் கிடக்கிறார்.

இச்சம்பவம் வீட்டினருகில் நடந்ததால், சத்தம் கேட்டு வந்த பொறியியல் கல்லூரி மாணவரான மகன் மற்றும் மனைவி துணையுடன் ஆம்புலன்ஸ் வருவித்து மருத்துவ மனையில் சேர்க்கப் படுகிறார். தனது நண்பனான பக்கத்து வீட்டு பேராசிரியரிடம் தன் அற்றுபோன கையை தேடி எடுத்து மருத்துவமனையில் சேர்க்கும் படி கேட்டு விட்டு மருத்துவமனையை சென்று அடைகிறார் பேராசிரியர்.

18 மணி நேர நீண்ட அறுவை சிகிச்சைக்கு பின்பு கிடைத்த விரல்கள், கைகள் சேர்த்து வைத்து தைத்து சேர்க்கின்றனர். கவலை தோய்ந்த மகனை கண்டதும், அப்பாடா தலை தப்பித்தது, ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பித்தோம் என ஆறுதல் படுத்துகிறார்.

இப்புத்தகம் வழியாக கேரளாவில் நிலவும் இன்றைய மத சமூகம் எவ்விதம் தனிமனிதர்கள் உரிமைகளுக்கு எதிராக நிற்கிறது என காண்கிறோம்..

தன்னுடைய குற்றமின்மையை நிரூபிக்க நெடிய நான்கு வருட சட்டப் போராட்டம், பெரும் சிகிச்சை செலவுகள், வேலையில் இருந்து நிறுத்தப்பட்டதால் ஊதியம் இல்லா நிலை அத்துடன் வக்கீல் கட்டணம் பிள்ளைகள் படிப்புச் செலவு என்று ஆசிரியர் குடும்பம் கடும் வறுமைக்குள் விழ ஆரம்பிக்கிறது.

"ஆசிரியர் குற்றவாளி அல்ல' என்று கேரளா நீதிமன்றம் விடுவித்து இருந்தாலும்,பேராசிரியர் அங்கமாக கொண்ட "சீரோ மலபார் திருச்சபையின் தலைமையில் உள்ள கல்வி நிர்வாகம்". பேராசிரியரை வேலைக்கு திரும்பப் பெற அனுமதிப்பதில் தாமதப்படுத்திக் கொண்டு வருக்கிறது.

வேலையில் இருந்து கிடைக்க வேண்டிய ஊதியம், பல சலுகைகள் பெற இயலாது, கடன்கள் மத்தியில் ஊசலாடி கொண்டு இருக்கிறது ஆசிரியர் குடும்பம். ஆளும் கம்யூனிஸ்டு, பிற்பாடு ஆட்சிக்கு வந்த காங்கிரஸ், எதிர்கட்சி கம்யூனிஸ்டு, மக்கள்நல வாழ்வு சங்கங்கள், ஆசிரியர்கள் கூட்டமைப்பு, சமூகத்தின் ஆளுமைகள் என எல்லா அமைப்பும் கல்லூரி நிர்வாகத்திடம் பேராசிரியரை திரும்பப் பெற வேண்டியும், கல்லூரி நிர்வாகம் மறுத்து வருகிறது. ஆனால் பல உறுதி மொழிகளை கொடுத்து ஆசிரியரை தங்கள் பக்கம் வைப்பது போல பாசாங்கு செய்து, பேராசிரியர் சட்டத்தை நாடாமல் இருக்கவும் தந்திரமாக செயல்படுகிறது. கடைசி வாய்ப்பாக கல்லூரி நிர்வாகம் விருப்ப ஓய்வு(voluntary retirement) என்ற ஒரு கருணையை பரிந்துரைக்கிறது. நான்கு வருடங்களாக தொடர்ந்த பிரச்சினைகள், வறுமை அத்துடன் மனைவியின் மனநிலை பிறழ் நோயுடனும் மல்லிடு கொண்டு இருக்கும் பேராசிரியர், வேலை திரும்ப பெற்றால் இழந்த வாழ்க்கையை மீட்கலாம் என்று நம்பிக்கை கொள்கிறார்.

குடும்பம், ஜெபம் என்று மட்டுமே வாழ்ந்த வெளியுலகம் அத்தனை பரிசயம் இல்லாத பேராசிரியர் மனைவிக்கு, கிறிஸ்தவ சமூக விலக்கு நிலைகுலய வைக்கிறது. ஒரு கட்டத்தில் "மதங்களே இல்லாவிடில் எத்தனை நல்லது என்று புலம்ப ஆரம்பிக்கிறாள்", அத்துடன் பேராசிரியரை குற்றப்படுத்தவும் ஆரம்பிக்கும் மன அழுத்த நோய்க்குள்ளும் வீழ்கிறாள்.

ஆசிரியர் தனது மனைவியை முதன் முதலில் கண்டதை பற்றி இவ்வாறாக குறிப்பிடுகிறார். அரசு உதவி பெறும் கல்லூரியில் வேலை கிடைத்ததும் பெண் தேடும் படலம் ஆரம்பமாகிறது. கல்லூரி ஆசிரியரான ஜோசப்புக்கு திருமணம் செய்து கொடுக்க அரசு பள்ளிகளில் ஆசிரியர்களாக வேலையிலுள்ள பல குடும்பங்கள் விரும்புகிறது. ஆனால் பேராசிரியருக்கு பெண் பார்க்க சென்ற இடத்தில், வெறும் 12 ஆம் வகுப்பு முடித்த, தகப்பன் இல்லா நிலையில் தாயின் அரவணைப்பில் வளரும் சலோமியை பிடித்துப்போய் விடுகிறது. தையல், அலங்காரம் போன்றவற்றில் பயிற்சி பெற்ற சலோமி தபால் வழியாக பட்டப்படிப்பு மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசை கொண்டவள். ஆனால் நிறைவேறாத ஆசைகளை மூட்டை கட்டி வைத்து விட்டு குடும்பத் தலைவியாக தன்னை மாற்றி அமைத்துக் கொண்டு அமைதியாக வாழ்த்து வருகிறவள். இப்போதைய நிலையில் தினக் கூலி வேலைக்கு போகவும் சலோமி தயங்கவில்லை. ஏதாவது வேலைக்கு போக தன்னை அனுமதிக்க வேண்டுகிறாள். ஜோசப் என்ற பேராசிரியர் தனது மனைவி வீட்டை விட்டு வேலைக்கு போவதையும் விரும்பவில்லை. ஆனால் மனைவியின் மன நோயை குணப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து மருத்துவமனைக்கு அழைத்து சென்று பணிவிடை செய்து வருகிறார்.

ஒரு கட்டத்தில் சலோமிக்கு, தன் மகள் திருமணம் எப்படி நடக்கும், வீட்டை எப்போது கட்டுவது, கடனில் இருந்து எப்போது தப்பிப்பது என்ற கவலையும் மன அழுத்தமும் சேர்ந்து நடமாட இயலாத வண்ணம்

படுக்கையில் விழ வைக்கிறது.

ஒரு சூசையப்பர் திருநாள் அன்று, கோயிலுக்கு போய் வந்த நிலையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்கிறாள் சலோமி. ஆயிரம் வெட்டில் பதறாத பேராசிரியர், தனது மனைவி இறந்ததும் உடைந்து நிலைகுலைந்து போகிறார்.

ஆனால் சலோமியின் மகள், இத்தனை துன்பத்தின் இடையிலும் கல்வி கடனில் படித்து செவிலியர் படிப்பை முடித்து அயர்லாந்து நாடு செல்கிறாள். அங்கிருந்து தனது ஊதியத்தை அனுப்ப ஆரம்பிப்பதுடன் குடும்பம் வறுமையில் இருந்து கரையேறுகிறது. பிற்பாடு தெலுங்கானாவை சேர்ந்த பாலமுரளி என்ற இந்து மனிதரை திருமணம் செய்து நிம்மதியாக வாழ்ந்து வருகிறாள்.

மகளுக்கு கல்வி கொடுத்த தைரியம், கல்வி பெற இயலாத சூழலில் வளர்ந்த சலோமிக்கு கிடைக்க வில்லை.

ஆசிரியரின் வழக்கில் எந்த வகையிலும் குற்றவாளியாக இல்லாத சலோமி; காக்கா, குருவி, அணிலுக்கு, உணவு வைத்து மகிழும் சலோமி, தனது உயிரை ஈடு வைத்து தனது கணவருக்கு திரும்பவும் வேலை கிடைக்க தனது தற்கொலையை ஒரு ஆயுதமாக பாவிப்பதுடன் 'நிறுவன' கொலைக்கு இரையாகிறாள்.

பேராசிரியர் ஜோசப்பின் வாழ்கை சரிதத்தில் ஆரம்பித்து சலோமி என்ற எளிய பெண்ணில் மரணத்துடன் வாசகர்களை நிலம் குத்தி நிற்க செய்கிறது புத்தகம்!.

சலோமியின் மரணத்தை தொடர்ந்து, சமூக அழுத்தத்தால், கல்லூரி நிர்வாகம் வேலையில் திரும்பப்பெற சம்மதிக்கிறது. வேலையில் தொடர ஆசை இருந்தும்; வெள்ளிக் கிழமை வேலையில் பிரவேசித்து, சனி, ஞாயிறு விடுமுறைக்கு அடுத்த நாள், திங்கள் அன்று வேலையில் இருந்து விருப்ப ஓய்வு பெறும் அவல நிலைக்கு தள்ள வைக்கிறது கல்லூரி நிர்வாகம்.

10 வருடங்களுக்கு பின் கையை வெட்டியவன் பேராசிரியரிடம் மன்னிப்பு பெற்று விட்டார். பேராசிரியருக்கும் வெட்டியவன் மேல் எந்த ஆதங்கமும் இல்லை. ஆனால் தான் நம்பின தனது மத நம்பிக்கையோடு இணைந்த, தன் சகோதரி துறவியாக சேவையாற்றும் சபை தன்னை முற்றிலும் புரக்கணித்ததை பேராசிரியரால் இன்னும் ஜீரணிக்க, புரிந்து கொள்ள இயலவில்லை. பேரா தி.ஜா. ஜோசப் தனது சர்ச்சைக்குரிய கேள்வியால் இஸ்லாத்தையும், முகமது நபியையும் மட்டுமல்ல நம்முடைய பரிசுத்த திரித்துவத்தையும் அவமதித்துள்ளார் என்று கிறிஸ்தவ கல்லூரி நிர்வாகம் கூறினது பேராசிரியரை அதிர்ச்சிக்குள் ஆக்குகிறது.

கிறிஸ்தவ ஆலய ஆராதனைகளில் வாசிக்கும் சுற்றறிக்கை வழி ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை தனிமைப்படுத்துவதை கதையில் காண்கிறோம். பேராசிரியர் சிறையில் இருக்கையில், தீபிகா என்ற கிறிஸ்தவ நாளிதழில் பேராயர் மார் ஜோசப் பவத்தில் மதச்சார்பின்மை என்ற கட்டுரை வழியாக "ஒரு கிறிஸ்தவப் பெயர் தாங்கிய ஒரு ஆசிரியரிடமிருந்து இந்தச் செயல் வந்திருக்கக் கூடாது" என்று கிறிஸ்தவ சபை மக்களை முழுதும் பேராசிரியருக்கு எதிராக அணி திரட்டும் பிரசாரங்களை முன்னெடுகும் போது ஒரு தனி மனிதராக எதிர் கொள்ளும் சூழலையும் விளக்கி உள்ளார். தனக்கு எதிராக செயல்பட்டதால் கர்த்தர் கொடுத்த தண்டனை என கொக்கரிக்கும் உடன் பணியாற்றும் பெண் துறவியின் வார்த்தைகளையும் பகிர்ந்துள்ளார். ஒரு ஆசிரியராக எளீய வாழ்க்கை வாழ்ந்து வந்த பேராசிரியர், கதை, ஜெயில், காவல் நிலையம் வழக்காடு மன்றம் என்ற சட்ட அமைப்பில் சிக்கி தவிக்கும் நிலையையும் வாசிக்கிறோம்.

கேரளாவின் இட்டுக்கட்டின 'மேம்பட்ட சமூகம்' என்ற முகத்திரையை கிழித்த புத்தகம் இது. ஆயிரம் தரம் வெட்டுப்பட்ட கைகால்களுடன் வாழ்ந்து வரும் பேராசிரியர் தற்போது வலது கையால் எழுத இயலாத நிலையில் இடது கையால் எழுத கற்றுக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரே ஒரு கேள்வியால், தான் சார்ந்த சபையின் எதிர்ப்பை சந்தித்து, தனிமையில் தள்ளப்பட்ட, அவரறியாதே மத-அரசியல் போரில் இரையாகி மடிந்த பேராசிரியரின் சரிதை இப்புத்தகம் விருவிருப்பாக வாசிக்க வைக்கிறது. ஒரு ஆசிரியர், ஒரு நல்ல ஆசிரியராக மட்டும் இருந்தால் போதாது என்று உணர்த்திய புத்தகமும் கூட! ஆசிரியருக்கே உருத்தான பகடியுடன் கதையை நகத்தும் பாங்கு சுவாரசியமானது. ஒரு கிராமத்து பேராசிரியர் சர்வதேச மத விரோத அரசியலில் மாட்டுப்பட்ட கதை சொன்ன சுவாரசியமான எளிய மனிதனின் வாழ்க்கை துயரை மிகவும் இயல்பாக கொஞ்சம் பகடியாகவே சொல்லிய புத்தகம் இது. இதன் ஆங்கில மொழியாக்கம் *'A Thousand cuts'* என்ற பெயரில் பெங்கிவின் பதிப்பகத்தால் வெளிவந்துள்ளது.


# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்